Registered as a news paper.

பக்கங்கள் பன்னிரண்டு

விலை ரூபா 10.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

யாழ்.நகரில் சுப முகூர்த்தப் பட்டுப் பிடவைகளின் கைராசியான நிறுவனம்



- கோலம் பட்டு
- அபூர்வா
- ரோஜா

இதர ரக பட்டு வேட்டிகளுக்கு நாடுங்கள்

சிவகணேசன் ரெக்ஸ்ரையில்ஸ்


41, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்

T.P: 222 2063

மலர்:04 | திருவள்ளுவர் | ஆண்டு: 2037 பங்குனி 23 | ஹிஜ்ரி 1427 | ற.அவ்வல் 7 | (06.04.2006) | வியாழக்கிழமை | இதழ் 185

# நல்லெண்ணத்தை வெளிப்படுத்த அரசுக்கு குறுகியகாலமே உள்ளது

## அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்



கிளிநொச்சி —

தெற்கில் இனவாதம் பேசிய கட்சிகளையும், சமாதான முயற்சிகளுக்கு எதிரான சக்திகளையும் சிங்கள மக்கள் தூக்கியெறிந்திருக்கிறார்கள்.

இந்த நிலையில் ஜனாதிபதி மகிந்த தனது நிலைப்பாட்டைத் தெளிவாக்கிக் கொள்ளவும், நல்லெண்ணத்தை வெளிப்படுத்தவும் குறுகிய காலமே இருப்பதாக அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

நேற்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹன்சன் பௌயர் மற்றும் நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஆகியோரைச் சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நேற்றுக்காலை 10.40 மணியளவில் ஆரம்பமான இந்தச் சந்திப்பில்- விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், தமிழீழ காவல்துறை பொறுப்பாளர் பா.நடேசன், சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.


இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் -

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சூடான், பலஸ்தீன பிரிவினைக்கு காரணமானவர் பௌயர்

## வீரவன்ச குற்றச்சாட்டு

## சொல்ஹெய்ம் நிராகரிப்பு



## வீரவன்ச குற்றச்சாட்டு

கொழும்பு —

ஜெனிவா பேச்சுக்களின் போது அரசு போர்நிறுத்த உடன்பாட்டில் திருத்தங்களைச் செய்வதுடன் - நோர்வேயை அகற்றவும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென தேசப்பற்று தேசிய இயக்கத்தின் செய்தியாளர் மாநாட்டில் ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச கோரிக்கை விடுத்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற இந்தச் செய்தியாளர் மாநாட்டில் பேசிய அவர் -

விதலைப் புலிகள் - 20 ஆண்டுகால யுத்தத்தால் பெற்ற பலனைவிட, இந்த நான்கு ஆண்டுகால போர் நிறுத்த ஒப்பந்த காலத்தில் நிறைய பலனடைந்துள்ளனர்.

ஜெனிவாவில் இந்த மாதம் பேச்சுக்கள் நடத்தவுள்ள அரசாங்கக் குழுவினர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## சொல்ஹெய்ம் நிராகரிப்பு

கொழும்பு —

இலங்கைக்கான நோர்வேயின் விசேட தூதுவராக நியமிக்கப் பட்டிருக்கும் ஜோன் ஹன்சன் பௌயர் சூடான் சமாதானப் பேச்சுக்களில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பங்குபற்றவில்லை என நோர்வே அரசாங்கம் அறிவித்துள்ளது. நோர்வே சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் பி.பி.சி சிங்கள சேவையான சந்தேசயவுக்கு நேற்றிரவு அளித்த பேட்டி யிலேயே இதுகுறித்துத் தெரிவித்தார்.

தேசப்பற்று தேசிய இயக்கம் நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் பேசிய விமல் வீரவன்ச - புதிய விசேட சமாதானத் தூதுவராக நியமிக்கப்பட்டிருக்கும் பௌயர் சூடான் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டு அதைப் பிளவுபடுத் துவதில் முக்கிய பங்குவகித்தவர் எனக் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறது. (12 ஆம் பக்கம் பார்க்க)



### ஜெனிவாவுக்கான புலிகளின் பயணம்

# ஜனாதிபதி மகிந்தவுடன் இன்று சொல்ஹெய்ம் ஆலோசனை!

கொழும்பு —

அடுத்த சுற்றுப் பேச்சுக்களுக்காக ஜெனிவா செல்லவுள்ள விடுதலைப் புலிகளின் பேச்சுக்குழு - கடல் விமானம் மூலம் கிளிநொச்சியிலிருந்து புறப்பட்டுச் செல்வது தொடர்பான புலிகளின் கோரிக்கை குறித்து நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் ஜனாதிபதி மகிந்தவிடம் ஆலோசனை நடத்தவுள்ளார்.

நோர்வே சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் இன்று கொழும்பு வந்து அடுத்த சுற்றுப் பேச்சுக்களின் முன்னேற்பாடுகள் குறித்து ஆலோசனை நடத்தவுள்ளார். இதன் போதே புலிகள் தரப்பில் இந்தக் கோரிக்கை குறித்து பேசப்படும் எனத் தெரியவருகிறது.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## க.பொ.த உயர்தரப் பரீட்சை மே 15 ஆம் திகதி ஆரம்பம்!

கொழும்பு —

க.பொ.த உயர்தரப் பரீட்சை எதிர் வரும் மே மாதம் 15 ஆம் திகதி ஆரம்பமாகி ஜூன் 22 ஆம் திகதிவரை நடைபெறும் என பரீட்சை ஆணையாளர் அனுர எதிரிசிங்க நேற்று அறிவித்தார்.

நாடெங்கும் 2 லட்சத்து 50 ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றும் இந்தப் பரீட்சையை - முன்னர் இந்த மாதத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பரீட்சையில் தோற்றும் பரீட்சார்த்திகள் தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு வைத்தி

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அதிகாரப் பரவலாக்கல் மூலமே பிரச்சினையை தீர்க்கவேண்டும்

### ரணிலிடம் மன்மோகன்சிங் வலியுறுத்து

கொழும்பு —

இலங்கை இனப்பிரச்சினைக் கு அதிகார பகிர்வின் மூலமே இறுதித் தீர்வு எட்டப்படவேண்டும்.

இந்தத் தீர்வு இந்தியாவின் அதிகாரப் பரவலாக்கத்துக்கு ஈடாக அமைய வேண்டும் என இந்திய பிரதமர் மன்மோகன்சிங் வலியுறுத்தியுள்ளார்.

இந்தியாவுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் பிரதமர் மன்மோகன்சிங்கை சந்தித்தவேளையே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

இந்தச் சந்திப்பின்போது இந்திய பிரதமர் மன்மோகன்சிங் மேலும் தெரிவித்ததாவது -

இலங்கையின் தீவிரபோக்கு இனவாதமற்ற, அனைவரும் ஒரு நிலைப் பாட்டில் (12 ஆம் பக்கம் பார்க்க)

மாபெரும் யாழ்.வர்த்தக கண்காட்சி - 2006
பண்டிகை காலத்தைக் கொண்டாடுங்கள்!
காலம்: ஏப்ரல் 8 முதல் 11 வரை இடம்: யாழ்/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.




# கண்டி - அஸ்கிரிய டெஸ்டில் வென்று தொடரை கைப்பற்றியது பாகிஸ்தான்

கண்டி

இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கிடையே கண்டி - அஸ்கிரிய அரங்கில் நடைபெற்ற இரண்டாவதும், இறுதியுமான டெஸ்டில் பாகிஸ்தான் அணி 8 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்று, 1:0 என்ற ரீதியில் கிண்ணத்



தைச் சுவீகரித்தது.

இலங்கை அணி தனது முதலாவது இனிங்ஸில் 279 ஓட்டங்களையும், பாகிஸ்தான் அணி 170 ஓட்டங்களையும் பெற்றது.

இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நேற்றுமுன்தினம் ஆட்டநேர முடிவில் 8 விக்கெட் இழப்புக்கு 73 ஓட்டங்களை எடுத்திருந்தது. மலிங்க எந்த ஓட்டத்தையும் பெறாமல் களத்திலிருந்தார்.

நேற்று ஆட்டத்தைத் தொடர்ந்த இலங்கை அணியில் மலிங்கவுடன் - முரளி ஜோடி சேர்ந்தார். எனினும் முரளி வந்தவேகத்திலேயே ஓட்ட



மெதையும் பெறாமல் ஆட்டமிழந்தார். ஜயசூரிய இந்தப் போட்டியில் காயம் காரணமாக ஆடாததால் இலங்கை அணி 9 விக்கெட் இழப்புக்கு 73 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தது.


இதையடுத்து பாகிஸ்தான் அணியைவிட இலங்கை அணி 182 ஓட்டங்கள் முன்னிலையில் இருந்தது.

இந்த நிலையில் தனது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 183 ஓட்டங்களைப் பெற்று இலங்கை அணியை 8 விக்கெட்டுக்களால் தோற்கடித்தது.

ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக இம்ரான் பர்கத் - கம்ரன் அக்மல் ஜோடி களமிறங்கியது. எனினும் ஸ்கோர் 38 ஆக இருந்தபோது பாகிஸ்தான் அணியின் முதல் விக்கெட் வீழ்த்தப்பட்டது.

26 பந்துகளில் 5 பவுண்டரிகள் அடங்கலாக 24 ஓட்டங்களைப் பெற்ற கம்ரன் அக்மல், மலிங்கவின் பந்தை சங்ககாரவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து யுனிஸ்கான் களமிறங்கினார். இம்ரான் பர்கத் - யுனிஸ்கான் ஜோடியின் இணைப்பாட்டத்தின்மூலம் பாகிஸ்தான் அணி



யின் ஸ்கோர் மளமளவென்று உயர்ந்தது. இந்த இருவரையும் பிரிக்க இலங்கை அணியின் பந்துவீச்சாளர்கள் திணறினர். எனினும் ஸ்கோர்



152 ஐ எட்டியபோது இம்ரான் பர்கத்தின் விக்கெட் வீழ்த்தப்பட்டது.

109 பந்துகளில் 11 பவுண்டரிகள் அடங்கலாக 65 ஓட்டங்களைப் பெற்றிருந்த இம்ரான் பர்கத், குலசேகரவின் பந்தை ஜெயவர்த்தனவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து மொகட் யூசுப் - யுனிஸ்கானுடன் ஜோடி சேர்ந்தார். இந்த இருவரும் பாகிஸ்தான் அணியை வெற்றியைநோக்கி அழைத்துச்சென்றனர்.

யுனிஸ்கான் 73 ஓட்டங்களையும், மொகமட் யூசுப் 14 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காதிருந்தனர்.

பந்துவீச்சில் குலசேகர, மலிங்க தலா 1 விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியின் தொடர் நாயகன் விருதை மொகமட் அசிப் தட்டிச்சென்றார்.

## ரேக்கி கிண்ண முதல்சுற்றில் சென்ரலைட்ஸ் அணி வெற்றி

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் கிரிக்கெட் சங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையே நடத்தப்படும் 50 ஓவர்களுக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் முதல்சுற்று ஆட்டம் ஒன்றில் யாழ்ப்பாணம் சென்ரல் விளையாட்டுக் கழகத்தை 9 விக்கெட் வித்தியாசத்தில் சென்ரலைட்ஸ் விளையாட்டுக்கழகம் வெற்றி கொண்டது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இந்தப்போட்டியில் - நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென்ரலைட்ஸ் விளையாட்டுக்கழக அணித் தலைவர் - சென்ரல் விளையாட்டுக் கழகத்தை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு கேட்டார். துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் சென்ரல் விளையாட்டுக்கழகம் 28 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 58 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது. இதில் சுரேஷ்ராஜ் 20, கனோஜ் 11, பாலகுமார் 9 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் சார்பில் மதூஷன் 3, பிரகாஸ் 3, விமலகாந் 2 பிரசாத் 1, சாள்ஸ் 1 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்ர லைட்ஸ் விளையாட்டுக் கழகம் 10 ஓவர்களில் 1 விக்கெட் இழப்புக்கு 59 ஓட்டங்களைப் பெற்று இந்தப் போட்டியில் 9 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இதில் றோகான் ஆட்டமிழக்காமல் 23, பிருந்தாவன் 15, கலிஸ்ரன் 12 ஓட்டங்களையும் பெற்றனர்.

சென்ரல் விளையாட்டுக்கழகத்தின் சார்பில் பாலகுமார் 1 விக்கெட்டைக் கைப்பற்றினாா. (58)

## ஷேவாக், கைவ் இருவரும் திறமையை நிரூபிப்பர்!

### சப்பல் நம்பிக்கை தெரிவிப்பு


கோவா

சேவாக், கைவ் இருவரும் மீண்டும் தமது திறமையை நிரூபிப்பார்கள் என்று இந்திய அணியின் பயிற்சியாளர் கிரேக் சப்பல் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் கிரேக் சப்பல் நிருபர்களுக்குப் பேட்டியளிக்கையில்-

ஷேவாக் மற்றும் கைவ் இருவரும் அனுபவம் வாய்ந்த சிறந்த வீரர்கள். அவர்கள் மேலும் பல ஆட்டங்களில் ஆடவுள்ளனர். எனவே, அவர்கள் விரைவில் தங்கள் திறமையை நிரூபிப்பார்கள். கைவ் துடுப்பாட்டவீரர் மட்டுமல்லாமல் சிறந்த களத்தடுப்பாளருமாவார்.

அவர் இங்கிலாந்துக்கு எதிரான பயிற்சி ஆட்டத்தில் சதமடித்தார். தொடர்ந்து 3 ஆட்டங்களில் சிறப்பாக ஆடாததால் அவர் மனதளவில் பாதிக்கப்பட்டுள்ளார். கைவ்வுக்கு ஏற்பட்



டுள்ள தற்போதைய நிலைமை எனக்கும் ஏற்பட்டது.

நான் 7 ஆட்டங்களில் தொடர்ந்து ஓட்டங்கள் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்துள்ளேன். அப்போது எனக்கு அது மிகுந்த வேதனை அளித்தது. அதே நிலையில்தான் கைவ் தற்போது உள்ளார் என சப்பல் கூறினார்.

## பிரதேச விளையாட்டு விழாவில் 11 சாதனைகள் முறியடிப்பு!

நெடுந்தீவு

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட கழகங்களுக்கிடையில் அண்மையில் இடம்பெற்ற பிரதேச மட்ட விளையாட்டு விழாவின்போது பதினொரு சாதனைகள் நிகழ்த்தப்பட்டன.

ஆண்களுக்கான மெய்வல்லுநர் போட்டியில் ஜொலிஸ்ரார் கழகத்தைச் சேர்ந்த எஸ்.சஞ்சித் 11.70 செக்கனில் 100 மீற்றர் ஓடி 2002 ஆம் ஆண்டு சாதனையை (11.90) முறியடித்ததுடன், நீளம் பாய்தலில் 12.64 மீற்றர் என்ற 2004 ஆம் ஆண்டு சாதனையை முறியடித்து 12.91 மீற்றர் பாய்ந்து சாதனை படைத்துள்ளார்.

காந்தி கழகத்தைச் சேர்ந்த வி. அன்புராஜ் 18:21.80 செக்கனில் 5000 மீற்றர் ஓடி, 1999 ஆம் ஆண்டு சாதனையை (18:54:80) முறியடித்தார். 10 000 மீற்றர் ஓட்டத்தில் 40:10.00 நிமிடம் என்ற 2001 ஆம் ஆண்டு சாதனையை 40:01.80 நிமிடம் என்ற அடிப்படையில் ஓடி முடித்து சாதனை படைத்தார்.

பெண்களுக்கான மெய்வல்லுநர் போட்டியில் அரியாலை ஐக்கிய கழகத்தைச் சேர்ந்த ரி.மதுரந்தி 1:18.30 செக்கனில் 400 மீற்றர் ஓடி 1999 ஆம் ஆண்டு சாதனையை (1:15.00) முறியடித்தார். தட்டெறிதலில் கே.சீ.சீ.சீ கழகத் தைச் சேர்ந்த பி.கோபிகா, 18 மீற்றர் என்ற 2003 ஆம் ஆண்டு சாதனையை 19 மீற்றர் எறிந்து முறியடித்தார்.

அரியாலை ஐக்கிய கழகத்தைச் சேர்ந்த ரி.ஸ்ரீசத்தியா ஈட்டி எறிதலில் 22.80 மீற்றர் என்ற 2002 ஆண்டு சாதனையை 22.94 மீற்றர் எறிந்து புதிய சாதனை படைத்ததுடன், குண்டெறிதலிலும் 6.61 மீற்றர் என்ற 2003 ஆம் ஆண்டு சாதனையை 6.92 மீற்றர் எறிந்து முறியடித்தார்.

கே.சீ.சீ கழகத்தைச் சேர்ந்த ஆர்.சம்சுக்கா மூன்று போட்டிகளில் புதிய சாதனை படைத்துள்ளார். 6:15.80 செக்கன் என்ற 2005 ஆம் ஆண்டு சாதனையை (6:12.80) செக்கனில் 1500 மீற்றர் ஓடி முறியடித்தார்.

அத்துடன் 5000 மீற்றரில் 25:42.00 செக்கன் என்ற 1999 ஆம் ஆண்டு சாதனையை 23:50.10 செக்கனில் ஓடி முடித்தும், 10000 மீற்றரில் 59:23.20 செக்கன் என்ற 1999 ஆம் சாதனையை 52:40:00 செக்கனில் ஓடி முடித்தும் புதிய சாதனைகளைப் படைத்தார். (113)

## வலி.கிழக்கு பிரதேச செயலக வருடாந்த விளையாட்டு விழா

நெடுந்தீவு

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்கள அனுசரணையுடன், வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவின் வருடாந்த விளையாட்டு விழா எதிர்வரும் 9 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கோப்பாய் பிரதேச செயலாளர் திருமதி அ.சாந்தசீலன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் - பிரதம விருந்தினராக வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் கே. டபிள்யு. விமலராஜனும் -

கௌரவ விருந்தினர்களாக வலி. கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் ரி.நடராஜா, மாவட்ட விளையாட்டு அலுவலர் றொகான் ராஜசிங்கம், ஜி.ரி.இசற் நிறுவனத்தின் யாழ்.ஆலோசகர் ஏ.கதிரமலைநாதன் ஆகியோரும், சிறப்பு விருந்தினராக அத்தியார் இந்துக் கல்லூரியின் அதிபர் ஈ.குணநாதனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (113)

## அடுத்த 4 போட்டிக்கான இந்திய அணி அறிவிப்பு

மர்கோவா

இங்கிலாந்துக்கு எதிரான கடைசி நான்கு ஒரு நாள் போட்டிக்கான இந்திய அணியிலிருந்து கௌதம் கம்பீர் நீக்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான முதல் மூன்று ஒரு நாள் போட்டிகள் முடிவடைந்த நிலையில் - அடுத்த நான்கு போட்டிகளுக்கான 15 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டது. இதில் கௌதம் கம்பீர் நீக்கப்பட்டுள்ளார்.

அவருக்குப் பதிலாக றொபின் உத்தப்பா சேர்க்கப்பட்டார். மற்றபடி அணியில் எந்த மாற்றமும் இல்லை. இதே அணியே பாகிஸ்தானுக்கு எதிராக அபுதாபியில நடக்கும் இரண்டு ஒரு நாள் போட்டிகளுக்கும் (ஏப்.18, 19) தேர்வுசெய்யப்பட்டுள்ளது.

அணிவருமாறு: - ராகுல் ராவிட் (கப்டன்), றொபின் உத்தப்பா, சேவாக், யுவராஜ்சிங், முகமட் கைப், சுரேஷ் றெய்னா, டோனி, பதான், ஹர்பஜன் சிங், ரமேஷ் பவார், அஜித் அகர்கர், முனாப் பட்டேல், வேணுகோபால் ராவ், ஸ்ரீசாந் மற்றும் ஆர்.பி.சிங்

## கோட்டமட்ட மெய்வல்லுநர் போட்டி மானிப்பாய் இந்து முதலிடத்தில்!

யாழ்ப்பாணம்

சண்டிலிப்பாய் கல்விக்கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியின் முதலாவது இறுதிநாள் நிகழ்ச்சிகள் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும், 2 ஆம் நாள் நிகழ்ச்சிகள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் நடைபெற்றன.

இதில் மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆண்கள் பிரிவில் 24 முதலிடங்கள், 15 இரண்டாம் இடங்கள், 06 மூன்றாம் இடங்கள் உட்பட 45 வெற்றிகளைப் பெற்று முதன்மை வகித்தது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி சார்பாக 15 வயதுப் பிரிவில் அ.நிரோஜன் 15 புள்ளிகளையும், 19 வயதுப் பிரிவில் சி.வினோத், தெ.ரூபின் தலா 15 புள்ளிகளைப் பெற்று முதன்மை வீரர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

விளையாட்டு

இந்த முறை ஒவ்வொரு வயதுப் பிரிவினருக்கும் மொத்தப்புள்ளிகளின் அடிப்படையில் வயதுப் பிரிவினருக்கான கேடயங்களும் வழங்கப்பட்டன.

இதில் ஆண்கள் பிரிவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 15, 17, 19 வயதுப் பிரிவில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று வெற்றிக் கேடயங்களை பெற்றுக்கொண்டது.

# தமிழர் - சிங்களவருக்கிடையே பாரிய முரண்பாடுகள் உள்ளன!

## அமைச்சர் டியூ குணசேகர



கொழும்பு —

விடுதலைப் புலிகளுக்கும் - அரசாங்கத்துக்கும் இடையே பாரியளவில் முரண்பாடுகள் உள்ளன. அதே போன்று தமிழருக்கும் சிங்களவருக்குமிடையே பாரிய முரண்பாடுகள் உள்ளன. இந்த வேளை தற்போதைய போர்நிறுத்த ஒப்பந்தத்தை பாதுகாப்பதே சிறந்ததென அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

போர்நிறுத்த உடன்படிக்கையை பலமுள்ளதாக்குவது தொடர்பாகவே இரண்டாம் சுற்றுப் பேச்சுக்களும் நடைபெறவுள்ளன. இதற்கு அப்பால் செல்வதற்கான குறிக்கோள் கட்டியெழுப்பப்படவில்லை. இந்தப் போர்நிறுத்த ஒப்பந்தத்தை தற்போது கிழித்துப் போடமுடியாது.

போர்நிறுத்தத்தில் திருத்தம் செய்ய வேண்டுமெனில் அதனை நட்புரீதியாகவே செய்யவேண்டும். ஏனெனில் இதில் இரண்டு தரப்பினர் உள்ளனர். இதில் எந்த மாற்றம் செய்வதென்றாலும் இரண்டு தரப்பினரதும் விருப்பம் தேவை.

இனப்பிரச்சினைக்கான தீர்வு என்று ஒன்று வரும்போது - ஜே.வி.பியும், ஹெல உறுமயவும் தமது கொள்கைகளிலிருந்து மாறவேண்டும். இன்று இரண்டு பிரதான கட்சிகளும் இனப்பிரச்சினை தொடர்பாகத் தெளிவான மாற்றத்தைக் காண்பித்துள்ளன. பிரதான கட்சிகள் இரண்டும் இந்த மாற்றத்தை ஏற்படுத்த 50 வருடங்கள் சென்றன. எனவே ஏனையவர்களும் மாறவேண்டும்.

வரலாற்றில் மற்றைய காலங்களை விட இனப்பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பாக நல்ல சந்தர்ப்பம் தற்போது தோன்றியுள்ளது. பிரதான கட்சிகளிரண்டும் ஒரு நிலைப்பாட்டுக்கு வந்தது இதில் பிரதான அம்சமாகும். எதிர்க்கட்சிகள் எதிர்த்தமையாலேயே டட்லி, பண்டாரநாயக்க, ஜே.ஆர் ஆகியோர் இனப்பிரச்சினையைத் தீர்க்கவில்லை எனத் தெரிவித்தார். (தே)

# மாணவரை அடித்த ஆசிரியருக்கு மூன்றரை லட்ச ரூபா நஷ்டமானது

கொழும்பு —

மாணவர் ஒருவரது காதில் அடித்தார் என்ற குற்றச்சாட்டில் தனது பிழையை ஒப்புக்கொண்ட கொழும்பு தேஸ்ரன் வித்தியாலய ஆசிரியர் ஒருவர் அந்த மாணவரது எதிர்கால கல்வி நடவடிக்கைகளுக்காக மூன்றரை லட்சம் ரூபாவை செலுத்துவதற்கு கொழும்பு உயர்நீதிமன்ற நீதியரசர் மாலினி ரணதுங்க முன்னிலையில் ஒப்புக்கொண்டார்.

இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பாக ஆயிரம் ரூபாவை அரச செலவாகவும் செலுத்துமாறு உத்தரவிட்ட நீதிவான் 5 ஆயிரம் ரூபா பிணைப்பணத்தைச் செலுத்துமாறும் கோரி அவரை விடுதலை செய்ய உத்தரவிட்டார்.

2000 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19 ஆம் திகதி அல்லது அதற்கு கிட்டிய நாளில் 18 வயதுக்கு குறைந்த மாணவனின் காதில் அடித்ததாக ஆசிரியருக்கெதிராக சட்டமா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்தக் குற்றச்சாட்டில் தனது குற்றத்தை ஒப்புக்கொண்ட ஆசிரியர், மாணவரது எதிர்கால கல்விச் செயற்பாடுகளுக்காக மூன்றரை லட்சம் ரூபாவை வழங்குவதாக வாக்குறுதி அளித்ததைத் தொடர்ந்து நீதிவான் அவரை விடுதலை செய்துள்ளார். (தே)

# சட்டவிரோதமாக ஆட்களை அனுப்பியமை அமைச்சர் ஜீவனின் அனுமதியுடனாம்!

## இரகசிய பொலிஸார் நீதிமன்றில் தெரிவிப்பு

கொழும்பு —

விளையாட்டுத்துறை அமைச்சின் தலைமையகத்திலிருந்து கொண்டு செல்லப்பட்ட விசாக்கள் மூலம் சட்டவிரோதமாக அமெரிக்காவுக்கு ஆட்களை அனுப்பியது விளையாட்டுத்துறை அமைச்சர் ஜீவன் குமாரதுங்கவின் அனுமதியுடனும், வழிகாட்டலுடனுமே என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாக இரகசியப் பொலிஸார் நேற்றுமுன்தினம் நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள பத்து சந்தேகநபர்களையும் நீதிமன்றில் ஆஜர்படுத்திய வேளை, இவர்கள் மீதான விசாரணையின் முன்னேற்றம் குறித்து நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பித்த போதே இரகசியப் பொலிஸார் இவ்வாறு தெரிவித்தனர்.

இவ்வாறு வெளிநாட்டுக்கு அனுப்பும் ஒருவரிடமிருந்து 8 லட்சத்துக்கும் அதிகமான தொகையைப் பெற வேண்டாமென அமைச்சர் தனது தனிப்பட்ட பணியாளர் சபைக்கு ஆலோசனை வழங்கியிருந்தாரென்பதும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாகவும் இரகசியப் பொலிஸாரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டவிரோத வர்த்தகம் தொடர்பாக இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் அதிகாரியாகவும், தேசிய சேவை இளைஞர் மன்றத்தின் மஹரகம இளைஞர் சேவை அதிகாரியாகவும் இரண்டு நிறுவனங்களில் பணியாற்றிய நாவல-நாரஹன்பிட்டிய வீதியில் வசிக்கும் சுனில் திஸநாயக்க எலிப்பிட்டிய என்பவரைக் கைதுசெய்து விசாரணைக்குட்படுத்தியபோதே இந்த விடயங்கள் வெளிவந்ததாகவும் பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

இவரைக் கைதுசெய்த வேளை அவரது வீட்டிலிருந்து மேலும் ஐவரை சட்டவிரோதமாக அமெரிக்காவுக்கு அனுப்புவதற்கு தயாரிக்கப்பட்டிருந்த 5 கடிதக்கோவைகள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் தெரிவித்த பொலிஸார் - அமெரிக்காவின் அலாஸ்காவில் 79 தொழில் வெற்றிடங்கள் உள்ளதாகவும், இதற்கு ஆட்களைச் சேர்க்குமாறு அமைச்சர் தனது பணியாளர் சபைக்கு தெரிவித்திருந்ததாகவும் பொலிஸார் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

ஏற்கனவே வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்ட 19 பேரிடமிருந்தும் 65 லட்சம் ரூபா பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட பத்து சந்தேகநபர்களையும் எதிர்வரும் 20 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீர்கொழும்பு மேலதிக நீதிவான் அருணி ஆட்டிகல உத்தரவிட்டார். (தே)

# தமது நிலைமையை ஜே.வி.பியினர் உணரவேண்டும் என்கிறார் சந்திரிகா

கொழும்பு —

ஜே.வி.பியினர் தற்போதாவது தமது நிலையைப் புரிந்துகொள்ள வேண்டுமென முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க தெரிவித்தார். உள்ளூராட்சி சபைத் தேர்தல் வெற்றியையடுத்து ஜனாதிபதிக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் லண்டனில் இருந்து வாழ்த்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் லண்டனில் இருந்து தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உயர் அதிகாரி ஒருவருடன் உரையாடி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு சமாதானத்தை ஏற்படுத்த மக்கள் வழங்கிய ஆணையாகவே தான் இதனைக் கருதுவதாகவும் முன்னாள் ஜனாதிபதி தெரிவித்தார். இந்த மக்கள் ஆணை ஜனாதிபதியின் சமாதானச் செயற்பாடுகளுக்கு வலுச்சேர்ப்பதாக அமைந்துள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி மற்றும் ஐக்கிய தேசியக் கடசி இரண்டைத் தவிர்ந்த மூன்றாவது சக்தி ஒன்று இல்லையென்பதை இந்தத் தேர்தல் முடிவுகள் வெளிக்காட்டியுள்ளதாகவும் அவர் கூறினார். (01)

# உள்ளூராட்சி சபை தலைவர்களை தெரிவுசெய்வதற்கு குழு நியமனம்!

கொழும்பு —

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கைப்பற்றிய 222 சபைகளுக்கும் மேயர் மற்றும் உபதலைவர்களைத் தெரிவு செய்வதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விசேட குழுவொன்றை நியமித்துள்ளார்.

பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தலைமையிலான இந்தக் குழுவில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, அமைச்சர்களான மங்கள சமரவீர, நிமால் சிறிபால டி சில்வா, சுசில் பிரேம ஜயந்த, நாடாளுமன்ற உறுப்பினரான டலஸ் அழகப்பெரும ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கைப்பற்றிய உள்ளூராட்சி சபைகளின் தலைவர்களது பெயர்களைப் பரிந்துரை செய்து முன்னணியின் செயலாளர் ஊடாக எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கும் பொறுப்பு இந்தக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைகளில் கூடுதலான விருப்பு வாக்கைப் பெறும் பிரதிநிதிக்கு குறித்த சபைகளின் தலைவராக நியமிப்பதற்கு ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் தீர்மானித்திருந்தார்.

ஆனால், வேட்பாளர் ஒருவர் கூடுதலான விருப்பு வாக்கைப் பெற்றிருந்தாலும் , அவர் ஏதாவது சட்டவிரோத நடவடிக்கையில் தொடர்புபட்டிருந்தால் அவருக்கு அந்தப் பதவியை வழங்கலாமா என்ற முடிவை மேற்கொள்ளும் முழுமையான அதிகாரம் ஜனாதிபதியால் இந்தக் குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. (தே)

# இலங்கையில் யுத்தம் ஏற்படாதிருக்க கட்சிகள் பொறுப்புடன் நடக்கவேண்டும்

## இந்திய முன்னாள் பிரதமர் வாஜ்பாய்

கொழும்பு —

சமாதானத்தைத் தோற்றுவிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தின்மூலம் குறித்த ஒரு இடத்துக்கு வந்துள்ள இலங்கை, மீண்டுமொரு யுத்தத்துக்குச் செல்லாமல் இருப்பதற்காக பிரதான அரசியல் கட்சிகள் மிகவும் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டிய காலம் தற்போது தோன்றியுள்ளதாக இந்தியாவின் முன்னாள் பிரதமர் வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு விஜயத்தை மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கடந்த புதன்கிழமை, புதுடெல்கியிலுள்ள அவரது இல்லத்தில் நடத்திய கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் வாஜ்பாய் பிரதமராக இருந்த காலப்பகுதியில் இலங்கைக்கு வழங்கிய ஆதரவுக்கு ரணில் தனது நன்றியைத் தெரிவித்தார். (தே)



# தமிழர்களின் பாதுகாப்புத் தொடர்பாக சர்வதேசம் அக்கறை கொள்ளவேண்டும்

## மேலக மக்கள் முன்னணி வேண்டுகோள்

கொழும்பு —

வடக்கு-கிழக்குக்கு வெளியில் வாழும் தமிழர்களின் பாதுகாப்பு தொடர்பாக சர்வதேச நாடுகள் அக்கறை செலுத்தவேண்டும் என மேலக மக்கள் முன்னணி கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தின் அதிகாரியிடம் வற்புறுத்தியுள்ளது.

மேலக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தலைமையிலான குழுவினர் நேற்று காலை கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலய அரசியல் விவகாரங்களுக்கான முதலாவது செயலரை சந்தித்தபோதே இவ்வாறு தெரிவித்தனர்.

ஜாதிக ஹெல உறுமயவின் கொள்கை வகுப்பாளர் சம்பிக்க ரணவக்க கொழும்பு தமிழர்கள் குறித்துத் தெரிவித்த கருத்து - வடக்கு-கிழக்குக்கு வெளியில் வாழும் தமிழ் மக்கள் மத்தியில் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதாகவும், மேலக மக்கள் முன்னணி சுட்டிக்காட்டியுள்ளது.

யாழ்ப்பாண குடாநாட்டிலுள்ள 40 ஆயிரம் படையினர் கொல்லப்படுவார்களென நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்ததாக தகவல் வெளியாகியிருந்தது.

எனினும், அவ்வாறான கருத்து எதனையும் அவர் வெளியிடவில்லையென மேலக மக்கள் முன்னணியின் தூதுக் குழுவினர் சுட்டிக்காட்டினர்.

இந்தநிலையில் நாடாளுமன்ற உறுப்பினரால் தெரிவிக்கப்படாத இவ்வாறான கருத்தை வைத்துக் கொண்டு கொழும்பில் வாழும் தமிழர்களின் 4 லட்சம் உடல்கள் கிளிநொச்சிக்கு அனுப்பப்படும் என சம்பிக்க ரணவக்க தெரிவித்திருந்தார்.

எனவே, தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ள இந்த விடயம் - மேலக மக்கள் முன்னணியினரால் பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதாக அந்தக் கட்சியின் பிரதித் தலைவர் நல்லையா குமரகுருபரன் தெரிவித்தார். (01)

# வற்வரி மோசடியில் தொடர்புடைய கம்பனிகளில் 12 போலியானவை!

## விசாரணைகள் மூலம் தெரியவந்தது

கொழும்பு —

இறைவரித் திணைக்களத்தின் மூலம் பெறுமதி சேர் வரியை மீளச் செலுத்தும்போது 235 காசோலைகள் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும், இவ்வாறு காசோலைகள் விநியோகிக்கப்பட்ட 20 கம்பனிகள் மற்றும் நிறுவனங்களில் 12 போலியானவையென பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இந்தப் போலியான கம்பனிகளுக்கு சம்மந்தப்பட்ட கடிதங்கள் தனியார் அடையாள அட்டைகளைச் சமர்ப்பித்து 357 கோடி 32 லட்சத்து 72 ஆயிரத்து 886 ரூபா நிதி மோசடி இடம்பெற்றுள்ளதாக இரகசிய பொலிஸ் பிரிவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வற் வரி மோசடி தொடர்பாகக் கைதுசெய்வதற்குத் தேடப்படும் கோடீஸ்வர வர்த்தகர் ஒருவர் அவரது கணக்குக்கு இறைவரித் திணைக்களத்தின் மூலம் கொழும்பு தனியார் வங்கிக்கு மாற்றப்பட்டிருந்த கோடிக்கணக்கான தொகை அவரால் எடுக்கப்பட்டுள்ளது.

பின்னர் இந்த கோடீஸ்வர வர்த்தகர் அந்த வங்கியிடமிருந்து 100 லட்சம் ரூபா கடனும் பெற்றுள்ளதாக இரகசியப் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. (தே)

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

## நமது ஈழநாடு நடத்தும் க.பொ.த. உயர்தரம் - 2006 பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான

## இலவச முன்னோடிக் கருத்தரங்கு

இடம் : யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை, தம்பையா மண்டபம்.
காலம் : 11.04.2006 காலை 8.30 மணி தொடக்கம் 5.30 மணிவரை.
பாடங்கள் : கணக்கியல் - சாம்
பொருளியல் - இராஜேஸ்வரன்
வர்த்தகம் - பசில்

அனுசரணை வழங்குபவர்கள்:

UNIT
One Step Ahead
0773134737 / 0214590720

தேசத்தின் வங்கியாளர்
இலங்கை வங்கி
BOC

105, Arasady Road, Jaffna.
FOR ALL ENGLISH CLASSES
LONDON ENGLISH COLLEGE

- Diploma in English — Duration : 3 Months
- IELTS — Duration : 3 Months
- Spoken English — Duration : 3 Months
- English Litterature (10, 11, 12, 13) — Duration : Annul
- English for KIDS — Duration : Annul
- Linguistics - GAQ, B.A

தரமான கணனிக் கல்விக்கு ஓர் புதிய உதயம்!
உங்களுக்காக, 100% செய்முறைப் பயிற்சியுடன், முற்றிலும் தமிழ்மொழி விளக்கங்களுடன்...
CICS Computer Technologies
# 87, Palaly Road, Thirunelvely, Jaffna.
Phone : 0777917610

AIMS
ACADEMY OF INFORMATION MANAGEMENT & SYSTEM STUDIES
# 118, Palaly Road, Thirunelvely, Jaffna.
Center for FOSS & LAMP

STP Your Partner in IT Solution
73, Palaly Road, Jaffna.
Leading IT Institution in Jaffna

COMMERCIAL BANK
கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்

# பணிநிலை வேண்டுகை

கீழ்வரும் பணிநிலைகளுக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள் தங்களது தன்வரலாறடங்கிய (சுயவிபரம்) வேண்டுகைகளை 2006.04.12 ஆம் நாளுக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கவும்.

**பணிநிலை**

1. ஆய அலுவலர் (ஆண்கள்)
2. ஆய உதவியாளர் (ஆண்கள்)
3. சமையலாளர் (ஆண்கள்)
4. சமையல் உதவியாளர் (ஆண்கள்)
5. கடின உழைப்புச் சிற்றூழியர் (ஆண்கள்)

**தகைமை**

பணிநிலை

1. க.பொ.த (உ/த) பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.
2. க.பொ.த (சா/த) பரீட்சையில் குறைந்தது 04 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.
3. உள்நாட்டு உணவு வகைகள் தயாரிப்பதில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.
4. சமையல் உதவியாளர் பணியில் பட்டறிவு இருத்தல் வேண்டும்.
5. ஆண்டு 07 கற்றிருப்பதுடன், சிற்றூழியர் பணியில் மூன்றாண்டு (03) பட்டறிவு இருத்தல் வேண்டும்.

**வேண்டுகை அனுப்பவேண்டிய முகவரி**

மேலாளர்,
ஆளணிப்பிரிவு,
ஆயப்பகுதி,
கிளிநொச்சி.

**நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள்**

2006.04.12 (புதன்கிழமை)
காலை 10.00 மணி

**நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம் :**

நடுவப் பணியகம்,
ஆயப்பகுதி,
கிளிநொச்சி.

குறிப்பு:
* தகுதிக்கேற்ப ஊதியம் வழங்கப்படும்.
* நேர்முகத் தேர்வுக்கு அழைப்பிதழ் அனுப்பப்பட மாட்டாது. பணிநிலை வேண்டுகைகளை அனுப்பி வைக்காதோரும் தகைமைச் சான்றிதழ்களுடன் நேர்முகத் தேர்வுக்குச் சமுகமளிக்கலாம்.

(4459) மேலாளர், ஆளணிப் பிரிவு, ஆயப்பகுதி.

நிறைஞ்சனாஸ் சங்கானை
விசால், மீராஜஸ்மின்
நடித்த
சண்டைக்கோழி
கா.நே:(பு.நே) 11.00, 2.45, 6.00

DAIDO Mopet



48CC

Koyo
ரேசர்கள்

DAIDO உதிரிப்பாகங்கள் YAMATO



ஏகமுகவர்
செரண்டிப் மோட்டர் என்டர்பிறைஸ் (பிரைவேட்) லிமிட்டெட்
60B, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு - 10.
தொலைபேசி : 011-2341580-1, 2438770,
பக்ஸ் 011-2454608
E.mail: zme@slt.lk

## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

02.04.2006 ஆம் திகதியன்று மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப் பத்திரம் (தே.அ.அட்டை இல. 663580 477 V கொண்டது) MD 90 - NPHI 6712 இற்குரிய புத்தகம், 2006 வரிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம் என்பன காணாமல் போயுள்ளன. கண்டெடுத்து 077 9588446 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்வோருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். (2237)

ராஜா யாழ்ப்பாணம்
ஸ்ரீகாந், மீராஜஸ்மின், கருணாஸ் நடித்த




மெர்குரிப்பூக்கள்
பு. நேரம் : 10.30, 2.30, 6.30, 9.00

நாதன்ஸ் யாழ்ப்பாணம்
பரத், சந்தியா நடித்த
காதல்
தினசரி நான்கு காட்சிகள்
கா. நே : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

மனோகரா யாழ்ப்பாணம்
மாதவன், பூஜா, வடிவேல், மணிவண்ணன் நடித்த
தம்பி
14 முதல் சித்திரைப் புத்தாண்டில் இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின
அதிரடி வெளியீடு
அஜித்குமார், சதா மற்றும்பலர் நடித்த
இயக்கம் : பேரரசு
திருப்பதி



கா.நே 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

## பதவி வெற்றிடம்

ACS

### Full Time Lecturers

- MS Office
- DTP

### Part Time Lecturers

- Electronic Commerce
- Tally Accounting Soft Ware

நேரம்:- 10.00 - 12.00 am
07.04.2006 - வெள்ளி
08.04.2006 - சனி

நேரில் சமூகம் தரவும்

Kopay Junction,
Kopay.
(சி/5199)

# VACANCY NOTICE - UNHCR

Post titles : Field assistant (National UNV)
Duty station : Kilinochchi

**Requiremends:**

- A thorough knowledge of humanitarian aid and development-orientated organizations in the Kilinochchi and Mullaitivu Districts
- Highly developed written and spoken English and local languages
- Experience in developing databases and managing information
- Ability to work on individual protection cases
- Ability to work closely with a variety of actors. Local authorities and directly with the beneficiary population

*Please contact UNHCR to botain more information on job description and application Brocedure*
(C/4460)

# குடாநாட்டில் கண்ணிவெடிகளை அகற்ற 2 ஆண்டுகள் தேவைப்படும்!



## யாழ். அரச அதிபர் கே.கணேஷ்

யாழ்ப்பாணம்

யாழ். குடாநாட்டில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை முற்றாக அகற்றுவதற்கு இன்னமும் இரண்டு ஆண்டுகள் தேவைப்படும் என யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

மிதிவெடி செயற்பாட்டின் விழிப்புணர்வுக்கும், பங்களிப்புக்குமான சர்வதேச தினத்தையொட்டி யாழ். இந்துக் கல்லூரியில் நடத்தப்பட்ட கண்காட்சியை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரை கண்ணிவெடிகள் அகற்றுவதற்கு உள்நாட்டு, வெளிநாட்டு தொண்டு நிறுவனங்கள் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றன. இந்தத் தொண்டு நிறுவனங்கள் யாழ்ப்பாணத்தில் புதைக்கப்பட்ட கண்ணி வெடிகளை அகற்றுவதற்கு 2006 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதி தேவைப்படும் என தெரிவிக்கப்பட்ட போதிலும், புதைக்கப்பட்ட கண்ணி வெடிகள் ஓரளவு அதிகமாகக் காணப்படுவதால் இன்னமும் இரண்டு ஆண்டுகள் அதிகமாகத் தேவைப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்ட 316 பிரதேசங்கள் இதுவரை இனம் காணப்பட்டிருக்கின்றன.

இந்தப் பிரதேசங்களில் மக்களின் தேவைக்கு ஏற்றமுறையில் மிதிவெடிகள் அகற்றப்பட்டு வருகின்றன. மீள் குடியமர்வுக்கான இடங்கள், விவசாய செய்கைக்குப் பயன்படுத்தப்படும் நிலங்கள், அரச காணிகள் போன்ற ஒழுங்கிலேயே மிதிவெடிகள் அகற்றப்பட்டு வருகின்றன.

கண்ணிவெடியகற்றும் தொண்டு நிறுவனங்களில் வேலை செய்கின்ற ஊழியர்கள், தமது உயிருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய இந்தச் சேவையைச் செய்து வருகிறார்கள்.

அத்தகைய தொண்டு நிறுவனங்களின் பணியாளர்கள் பணி செய்யும் இடத்தில் பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அவசியமான ஓர் விடயமாகும்.

சில பிரதேசங்களை எடுத்துக் கொண்டால், கண்ணிவெடிகள் உள்ள பிரதேசங்களை இனங்கண்டு அவற்றை அடையாளப்படுத்துவதற்காக நாட்டப்பட்ட கட்டைகளைக் கூடப் பொதுமக்கள் பிடுங்கிச் செல்கின்ற நிலை காணப்படுகிறது.

மக்களின் இத்தகைய செயற்பாடுகள் பணியாளர்களின் பணியின் அளவை மேலும் அதிகரித்துக் கொண்டு செல்வதுடன், பணியைச் சரியாகச் செய்ய முடியாத நிலையை ஏற்படுத்துகிறது.

மிதிவெடி தொடர்பான விழிப்புணர்வு மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்ட பின்னரே, மிதிவெடியில் சிக்குபவர்களின் அளவு குறைவாகக் காணப்படுகிறது. யாழ். குடாநாட்டில் பணியாற்றும் தொண்டு நிறுவனங்களின் செயற்பாடுகளுக்கு மக்களும் பாதுகாப்பாக அமையவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (வ)

# லஞ்சீற் பாவனையை தடைசெய்ய யாழ். மாநகர சபை தீர்மானம்!

## அடுத்த மாதம் 15 முதல் நடைமுறையில்

யாழ்ப்பாணம்

உணவகங்கள், மற்றும் விடுதிகளில் லஞ்சீற் பாவனையை அடுத்த மாதம் 15 ஆம் திகதி முதல் தடை செய்வதற்குத் தீர் மானித்துள்ளதாக - யாழ். மாநகர சபை ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை யாழ். பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற திண்மக் கழிவகற்றல் பற்றிய ஒரு நாள் பயிற்சிப் பட்டறையில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பாக யாழ். மாநகரசபை வழங்கிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

உணவகங்கள் மற்றும் விடுதிகளில் லஞ்சீற் பாவனையைப் படிப்படியாகக் கட்டுப்படுத்தி அதற்குப்பதிலாக வாழை இலை, தாமரை இலை பாவனையை ஊக்குவித்து அடுத்த மாதம் 15 ஆம் திகதியிலிருந்து லஞ்சீற் பாவனையை முற்றாகத் தவிர்த்தல்.

திண்மக்கழிவகற்றல் பற்றி பொதுமக்களுக்கு விழிப்புணர்வையூட்டும் நிகழ்ச்சிகள் மற்றும் கருத்தரங்குகளை நடத்துவதற்கு வலயச் செயலாற்றுக் குழுக்களுடன் இணைந்து வீடு வீடாகச் சென்று விளக்கமளித்தல்.

வீதியோரங்களில் வீசப்படும் கழிவுகளைக் குறைக்கும் நோக்கில் மரக் கிளைகள் வாழைக்குற்றிகள் போன்றவற்றுக்கு கட்டணம் அறவிடும் நடைமுறையை அமுல் செய்வதற்கு வசதியாகச் சகல சுகாதார மேற்பார்வையாளர்களுக்கும் பற்றுச்சீட்டுப் புத்தகங்களை வழங்குவது போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.



வயாவிளான் மத்திய மகா வித்தியாலய தரம் 1 கால்கோள் விழாவின் போது அதிபர்கே.கனகராசா பாடசாலைக் கொடியை ஏற்றுவதையும், மாணவர்கள் பாடசாலைக் கீதம் இசைப்பதையும், அருகில் பிரதம விருந்தினர் - வலிகாமம் வலய ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் எஸ்.இராமச்சந்திரன் நிற்பதையும் படத்தில் காணலாம். (82)

# வகுப்பறை திறப்பு விழா

தென்மராட்சி

மீசாலை விக்னேஸ்வராக் கல்லூரியில் வகுப்பறை கட்டட திறப்பு விழா -இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் சுவிஸ் அபிவிருத்திக் கூட்டுத்தாபன யாழ். பணிப்பாளர் றுடொல்ப் பன்கூசர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கட்டடத்தைத் திறந்து வைக்கவுள்ளார்.

பாடசாலை அதிபர் கே.கதிர்காமசேகரர் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் - சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அ.வேதநாயகம், கே.சிவபாலன், எஸ்.குகநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (29)

# அதிபர்களுக்கான கூட்டம்

தென்மராட்சி

தென்மராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட அதிபர்களுக்கான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 1 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளதாகவும், அதில் முக்கிய பிரச்சினைகள் ஆராயப்படவுள்ளதால் தவறாது கலந்துகொள்ளும்படியும் வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (29)

# தீவகத்தில் பலப்படுத்தப்படும் கடற்படை முகாம்கள், காவலரண்கள்

நெடுந்தீவு

தீவுப்பகுதிகளிலுள்ள கடற்படை முகாம்கள் மற்றும் காவலரண்கள் என்பன கடற்படையினரால் புனரமைக்கப்பட்டு வருவதுடன், வீதிகளில் இருமருங்கும் முட்கம்பி, வேலிகள் அமைக்கும் செயற்பாடும் இடம்பெற்று வருவதனால் பொதுமக்கள் மத்தியில் அச்சமும் விசனமும் தெரிவிக்கப்படுகிறது.

பண்ணைப்பாலம் முதல் அல்லைப்பிட்டிக் கடற்படை சோதனைச் சாவடி வரையான பிரதான வீதியின் இருமருங்கிலும் முட்கம்பி வேலிகள் அமைக்கப்பட்டுவருதுடன், புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் வீதிகளிலிருந்து அகற்றப்பட்ட காவலரண்களை மீண்டும் அமைத்துப் படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை அல்லைப்பிட்டி, மண்கும்பான், மடத்துவெளி, குறிகாட்டுவான், நடுத்துருத்தி போன்ற பிரதான வீதியை அண்டியுள்ள படை நிலைகளில் காவலரண்கள் அமைக்கப்பட்டு வருவதுடன், பதுங்குகுழிகளும், புதிதாக முட்கம்பி வேலிகளும் அமைக்கப்பட்டு வருகிறது.

பாரிய இயந்திரங்கள் கொண்டு இந்தப் பகுதி முகாம்களைச் சுற்றி மண் அணைகளும் அமைக்கப்பட்டு வருகின்றமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கதாகும். (113)

# குரு பூசை

கோண்டாவில்

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய இந்து மா மன்றத்தினரால் நடத்தப்படும் ''தவத்திரு சிவயோக சுவாமிகள்'' குருபூசை தினம் எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை மாணவர்களின் பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகும் இந்த நிகழ்வில்- சைவப்புலவர் சைவசித்தாந்த பண்டிதர் திருவருள் வாசகர் கா.கமலநாதன் ''சித்தர்களில் யோகர்'' என்ற விடயம் தொடர்பாகச் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார். (82)

# தளபாடக் கொள்வனவுக்கு 30 ஆயிரம் ரூபா அன்பளிப்பு

மட்டுவில்

மட்டுவில் வடக்கு ஸ்ரீ முத்துமாரியம்மன் அறநெறிப்பாடசாலைக்குத் தேவையான தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கென ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, இந்த ஆலயத்தின் உள்மண்டபக்கூரை அமைக்கும் வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதற்கான நிதி உதவி வழங்க விரும்பும் உள்ளூர், வெளியூர் அன்பர்கள் நேரடியாக மேற்படி ஆலய நிர்வாக சபையுடன் தொடர்பு கொள்ளும்படி பரிபாலன சபைத் தலைவர், வைத்தியகலாநிதி நா.சின்னத்தம்பி கேட்டுள்ளார்.

அண்மையில் இந்த ஆலயத்தின் புதிய பரிபாலனசபை தெரிவு இடம் பெற்றது. இதில் தலைவராக வைத்தியகலாநிதி நா.சின்னத்தம்பி, உபதலைவராக இளைப்பாறிய கல்விப் பணிப்பாளர் ச.சின்னத்தம்பி, செயலாளராக ஆ.மகேச்சுரன், உபசெயலாளராக அதிபர் செ.சிவஞானம், பொருளாளராக ச.நடராசா ஆகியோர் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், 10 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவாகியது. மேற்குறிப்பிட்ட அங்கத்தவர்கள் தவிர வேறு எவருடனும் ஆலய சம்பந்தமான கொடுக்கல் வாங்கல் எதையும் மேற்கொள்ள வேண்டாம் என பரிபாலனசபைத் தலைவர் வைத்திய கலாநிதி நா.சின்னத்தம்பி தெரிவித்தார். (24)

# உடற்பயிற்சி போட்டி

தென்மராட்சி

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையேயான 2006 ஆம் ஆண்டுக்கான வருடாந்த வலய மட்ட உடற்பயிற்சிப் போட்டிகள் எதிர் வரும் 10 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு கொடிகாமம் அரசினர் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (29)

# யாழ்ப்பாணம் மொழியும் வாழ்வும் நூல் வெளியீட்டு விழா!


யாழ்ப்பாணம்

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசாவின் அறுபதாவது அகவையை முன்னிட்டு 'யாழ்ப்பாணம் மொழியும் வாழ்வும்' எனும் நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் பிற்பகல் 3 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் - வரவேற்புரையை கலாநிதி இரகுநாதனும், ஆசியுரைகளை நல்லை ஆதீன முதல்வர், கலாநிதி வண.நி மரியசேவியர் அடிகளார், முன்னாள் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் ஆகியோரும், வாழ்த்துரையைக் கலைப்பீடாதிபதி சிவச்சந்திரன், கலாநிதி குணராசா, செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன், விக்னேஸ்வராக் கல்லூரி அதிபர் வே.சிவசிதம்பரம் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

நூலின் முதற் பிரதியை கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி வெளியிட்டு வைக்க, பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா பெற்றுக் கொள்வார்.

# தவக்கால நற்சிந்தனை



இன்றைய நாட்களில் அறிவியல் பூர்வமாக விரலின் நுனியில் உலகத்தையே அறிந்து கொள்ள நினைக்கிறோம். இந்த உலக வாழ்வு நிலையானது போலவும், உலகத்தை மட்டுமே ஆதாயப்படுத்துவது போலவும் எண்ணி, அப்படியே அலசி ஆராய்ந்து சோர்ந்து போகிறோம். ஆனால், நற்செய்தி கூறுவது என்ன? இறையாட்சி நெருங்கி வருகிறது. மனந்திரும்பி மன்னிப்புப் பெறுங்கள் என்பதாகும். பல்வேறு வித ஆட்சியினால், பொய் முகங்களோடும், போரிலே உங்களோடும் அன்பு என்னும் உணர்வுக்கும்கூட தொலைக்காட்சி தொடர்களில் விடைதேடும் நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கும் நமக்கு ''என் வார்த்தை உங்களுள் நிலைத்திருந்தால், நீங்கள் விரும்பியதைக் கேளுங்கள். உங்களுக்கு அருளப்படும்'' என்கிறார் ஆண்டவர்.

இறைவனின் வார்த்தை உயிருள்ளது, ஆற்றல் மிக்கது. வார்த்தையால் உலகை உண்டாக்கிய இறைவன் வாக்கு மாறாதவர். நாக்கு பிறழாதவர். வார்த்தையில் உண்மையுள்ளவர். எனவே ,அவரது வார்த்தையின் வழியிலே வாழ நாம் ஒவ்வொருவரும் அழைக்கப்பட்டிருக்கிறோம். அவ்வாறு அவரது அழைப்பை உள்வாங்கி, அவரை விசுவாசித்து, அவரது வார்த்தையின்படி நடக்கும்போது இறையாட்சியின் மக்களாகும் உரிமை பெறுகிறோம். இதனை உணர்ந்து ஏற்று வாழ்வோம்.

*மோ.தார்சீசியஸ்*

# புத்தாண்டு கொடுக்கல் வாங்கலுக்கு சமுர்த்தி வங்கிகள் திறந்திருக்கும்

யாழ்ப்பாணம்


எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டு தினத்தில் சமுர்த்தி பணநுகரிகள் தமது கணக்கில் வைப்பிலிடுவதற்காக அனைத்து சமுர்த்தி வங்கிகளும் காலை 9.30 மணிக்குத் திறக்கப்படும்.

அன்றைய தினம் புத்தாண்டு கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வாடிக்கையாளர்களுக்கு கைவிசேடம் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை 500 ரூபாவுக்கு மேற்பட்ட ஒவ்வொரு பங்கு கணக்கு, சிறுவர் கணக்கு மற்றும் புதிய கணக்காக வைப்பிலிடும் ஒவ்வொருவருக்கும் சீட்டிழுப்பு ஒன்று நடத்தப்பட்டு 1 ஆவது பரிசாக 2500 ரூபாவும், 2 ஆவது பரிசாக 1500 ரூபாவும், 3 ஆவது பரிசாக 1000 ரூபாவும் வழங்கப்படவுள்ளது. இது எதிர்வரும் 19 ம் திகதி வரை நடைமுறைப்படுத்தப்படும்.

இதேவேளை சமுர்த்தித் திட்டங்களை மக்களுக்கு விளக்கும் விளம்பரமாக பல விளையாட்டு நிகழ்வுகளை நிகழ்த்தவும் சமுர்த்திப் பணிப்பாளர் நாயகத்தினால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதன் கருப்பொருள் பத்தாயிரம் புத்தாண்டு வைபவங்கள் என்பதாகும். இதன்போது சமுர்த்தி புத்தாண்டு குமாரி, சமுர்த்தி புத்தாண்டு குமரன், மரதன் ஓட்டம், வினோத உடை வழுக்குமரம் ஏறல், கயிறு இழுத்தல் போன்ற நிகழ்ச்சிகள் நடத்தவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (110)




# மிளகாய்ப் பயிர்ச்செய்கை

(சென்றவாரத் தொடர்ச்சி....)

**நீர்ப்பாசனம்**

பயிர்ச்செய்கைக் காலங்களில் அதாவது 150 நாட்களில், 4 ஏக்கர் (Ac) அடி நீர் தேவைப் படுகிறது. (120 ஹெக்டேயர்/சென்ரிமீற்றர்). பயிரின் ஆரம்ப காலத்தில் அதாவது நாற்று நட்டு முதல் இரண்டு மாத காலங்களில் 3-4 நாட்களுக்கு ஒரு தடவை நீர் விநியோகம் செய்தல். தாவரங்கள் பூக்கின்ற வேளையில் போதியளவு நீர்ப்பாசனம் செய்தல்.

இதற்கு மிகச்சிறந்தது தூவல் முறை நீர்ப் பாசனமாகும். இதனால் பீடைத்தாக்கம், நோய்த் தாக்கம் ஆகியவற்றைச் சிறப்பாகக் கட்டுப்படுத்த முடியும். தாவரத்துக்கு இயற் கையான உயர் ஈரப்பதனை வழங்குகிறது. பூக்கும் வேளையில் தூவல் முறை நீர்ப் பாசனத்தை நிறுத்தல் வேண்டும்.

**களைகளைக் கட்டுப்படுத்தல்**

2ஆம், 4ஆம், 7ஆம், 10ஆம் வாரங் களில் கைகளால் பிடுங்கி களைகளை அகற்றி விடல் வேண்டும். களை கொல்லிகளைப் பயன்படுத்துவதன் மூலம் களைகளைக் கட் டுப்படுத்தலாம்.

1. அல்க்குளோர் - லீற்றருக்கு 480 கிராம் செரிகுளம் - ஏக்கருக்கு 1200 - 2000 மில்லி கிராம்.

2. நப்புரோமைட்டு 50% நீரில் கரையும் தூள் -

ஏக்கருக்கு 1200 - 1600 கிராம்

நாற்றுக்கள் நட்டு 02 நாட்களில் தரை ஈரமாகவுள்ளபோது இந்தக் களை நாசினி களை விசுறுவது அவசிய மாகும். இதன் மூலம் ஒரு மாத காலத்துக்குக் களை களைக் கட்டுப்படுத்தலாம்.

**நோய்களும் அவற்றைக் கட்டுப்படுத்தும் முறைகளும்**

**நாற்று அழுகல்**

மண்ணில் காணப்படுகின்ற பல்வேறு பங் கசுக்களால் இது ஏற்படுகின்றது. இந்த நோயால் நாற்று மேடையில் நாற்றுக்களுக்கு அதிகம் சேதம் ஏற்படுகிறது. நன்கு நீர் வடிதிறனுடைய மண், முன்பு சொலனேசியே (solanaceae family) செய்கை பண்ணப்படாத இடம் அல்லது கீழ் மண் உபயோகித்து மேடை அமைத் தல், மேடைகளைத் தொற்று நீக்கிக் கொள் ளுதல், 7-10 நாட்களுக்கு ஒரு தடவை கப்ரான் (captan) அல்லது திராம் (Thiram) பங்கசு நாசினி 20 கிராமை 10 லீற்றர் நீரில் கரைத்து மேடைகளில் தெளித்தல் ஆகியவற்றால் இந்த நோயைக் கட்டுப்படுத்தலாம்.

**அந்திரக் நோசு (Anthracnose)**

கொலற்றோரிக்கம் கப்சிசி (colletroricum capsici) பங்கசுக்களால் இந்த நோய் ஏற்படு கிறது. ஆரம்பத்தில் கிளைகளின் நுனிகளி லிருந்து இறக்கத் தொடங்கி இறுதியில் தாவரம் இறக்கிறது. நோயற்ற மரங்களிலிருந்து நடு வதற்கு விதைகளை எடுத்தல், பங்கசு நீக்கி தொற்று நீக்கிய விதைகளை உபயோகித்தல். இந்த நோய் - பயிர்கள் முழுவதையும் தாக்க ஆரம்பித்தால், குளோரோதவொனில் 75 வீதம் நீரில் கரையும் தூள் 75 கிராம் அல்லது தயோ பொளேற், மிதையில் 70 வீதம் நீரில் கரையும் தூள் 75 கிராமை 100 லீற்றர் நீரில் கரைத்து விசிறல் வேண்டும்.

**வாடல் நோய்**

சூடோமொனஸ் சொலனேசியாரம் (psoud omonas solanaccaram ) பக்ரீறியாவால் ஏற்படுத்தப்படுகிறது. சொலனேசியாப் பயிர் (solanaceae family) ஒரே இடத்தில் தொடர்ச் சியாகப் பயிர் செய்யப்படுவதைத் தவிர்த்தல். பயிரிடுவதற்குச் சிறந்த நீர் வடிதிறனுடைய பிரதேசத்தை தெரிவு செய்தல். நோயால் பீடிக் கப்பட்ட தாவரத்தையும், மண்ணையும் அந்த இடத்திலிருந்து அகற்றுதல் வேண்டும்.

**இலைப்புள்ளி நோய்**

சேர்க்கஸ் போரா கப்சிசி (cerospora caps



ici ) எனப்படும் பங்கசால் இந்த நோய் ஏற்படுகிறது. பயிர்ச்செய்கை செய்யப்படும் சுற் றாடலை சுத்தமாக வைத்திருத்தல், அந்திரக் நோயைக் கட்டுப்படுத்தும் வழிகளை இங்கும் கையாளுதல் வேண்டும்.

**அடி அழுகல்**

மண்ணில் வாழுகின்ற பித்தியம் (phythi um) பியுசேரியம் (fusarium solani) ஸ்செல ரோட்டியம் (sclerotium rolifsil) பைற்றொட் தோரா (phytophthore) இனப்பங்கசுக்களால் இந்த நோய் ஏற்படுகிறது. நாற்று மேடைகளைத் தொற்று நீக்குதல், 200 கிராம் கப்ரான் அல்லது திராம் பங்கசு நாசினி 100 லீற்றர் நீரில் கரை த்து பாதிக்கப்பட்ட தாவரத்தினிடம் அயலிலுள்ள மண் ஆகியவை நனையும் வரை இதனை விசிறுதல் வேண்டும்.

**ஒடுங்கிய இலை**

இதற்கான காரணம் இதுவரை கண்ட றியப்படவில்லை. இது சிறுபோகத்தில் அதிக ளவு ஏற்படுகிறது. மிளகாய்ப் பயிருக்கு சிபாரிசு செய்யப்பட்ட இரசாயன உரங்களை இடுதல். சேதனப் பசளைகளை மிளகாய் நாற்றுகள் நடு வதற்கு ஒருமாதம் முன் ஏக்கருக்கு 2தொன் வைக்கோல் இடுதல். நாற்று நடும் சந்தர்ப்பத் தில் 4 தொன் சாணம் இடுதல். மிளகாய் நாற் றுக்கள் நடுவதற்கு ஒருமாதத்துக்கு முன் 4 தொன் பச்சை சீமைக்கிழுவை (கிளிரிசிடியா) இலைகளை மண்ணுடன் கலந்து விடுதல்.

**இலைச் சுருள்**

எமது பிரதேசத்தில் எதிர் நோக்கும் பிரதான பிரச்சனை இதுவாகும். பயிரின் சகல பருவத் திலும் இது ஏற்படுத்தப்படுகிறது. பனிப்பூச்சிகள், ஏபிட்டுக்கள், சிற்றுண்ணிகள் என்பவற்றாலும் ஈயால் பரப்பப்படும் வைரசுக்களினாலும் இது ஏற்படுத்தப்படுகிறது.

1) பனிப்பூச்சி (thrips) -

இளம் இலைகளின் மேற்பரப்பைச் சுருட்டி சாற்றை உறிஞ்சும்.

2) சிற்றுண்ணி -(mites) இலையின் கீழ்ப்புறத்தே சாற்றை உறிஞ்சுவதனால் இலை கள் தடித்து கீழ்ப்புறமாகச் சுருளும்.

3) ஏப்பிட்டுக்கள்-(aphid)

பீடை கொல்லிகளை செறிவாக விசிறு வதனால் இவற்றைக் கட்டுப்படுத்தலாம்.

4) வெண் ஈ- (white fly)

பயிரில் சாற்றை உறிஞ்சும் பொழுது வைர சுக்களைப் பரப்புகிறது.


இவற்றைக் கட்டுப்படுத்த, களைகளைக் கட்டுப்படுத்தல், பயிர்கள் நன்கு செழிப்பாக வளர சகல நடவடிக்கைகளையும் எடுத்தல். பீடை கொல்லிகளை விசிறிப் பீடைகளின் எண் ணிக்கையைக் குறைத்தல்.

(தொடரும்...)

# சந்தைப்படுத்தலுக்கு முன்...

**உற்பத்திப் பொருட்கள் பாவனையாளரை நல்ல நிலையில் அடைவதற்கு விவசாயிகள் மூன்று முக்கிய விடயங்களில் கவனம் செலு த்த வேண்டும். இந்த மூன்று விடயங் களிலும் அவர்கள் கவனம் செலுத்தாவிடில் சந்தைப்படுத்தலில் அர்த்தமே இருக்காது.**

சந்தைக்குப் பொருட்களை உற்பத்தி செய் யும் விவசாயிகள் அவை பாவனையாளருக்கு நல்ல நிலையில், குறைந்த விலையில் கிடைப் பதற்கான வழி வகைகளைக் கடைப்பிடிக்க



வேண்டும். அப்பொழுது தான் அவற்றுக்கு அதிக மதிப்பு ஏற்படுவதுடன், அவை பெரு மளவில் விற்பனையுமாகும்.

உற்பத்தியாளரிடமிருந்து உற்பத்திப் பொருட்கள் சந்தைக்கு நல்ல நிலையில் போய்ச் சேராதவரையில் அவை சேதமடை வதுடன் அதனால் ஏற்படும் நஷ்டத்தையும் உற்பத்தியாளரே ஏற்றுக்கொள்ள வேண்டி வரும்.

உற்பத்திப் பொருட்கள் பாவனையாளரை அடையும் வரை விவசாயிகள் மூன்று விடய ங்களில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும்.

**அவையாவன -**
**பொதிப்படுத்தல்**
**ஏற்றியிறக்கல்**
**பண்டசாலைப்படுத்தல்**

இந்த மூன்று விடயங்கள் குறித்து அதிக கவ்னம் செலுத்தாத விடத்து, உற்பத்திப் பொரு ட்கள் தரம் குன்றும் அல்லது பழுதடையும் அல்லது அழுகிப்போகும். சில சந்தர்ப்பங் களில் எந்த வித பிரயோசனத்துக்கும் அப்பாற் பட்டதாகவும் இருக்கும்.

பொதிப்படுத்தல், ஏற்றியிறக்கல், பண்ட சாலைப்படுத்தல் ஆகிய மூன்றும் உற்பத்தி யாளருக்கும், பாவனையாளருக்கும் இடை யிலான பாலம் என்று கூறினால் மிகையா காது.

உற்பத்திப் பொருட்கள் பாவனையாளரு க்கு நல்ல நிலையில் குறைந்த விலையில் கிடைக்குமிடத்து, உற்பத்தியாளரின் சந்தைப் படுத்தலுக்கு வெற்றி கிட்டியுள்ளது என்பதே அர்த்தமாகும்.

மரக்கறிகள், பழவகைகள் ஆகியன கூடிய விரைவில் பழுதடைந்து போகும் தன்மையுள் ளதால், அவற்றை சிறந்த முறையில் பொதிப் படுத்தவும், ஏற்றியிறக்கவும், கெட்டுப்போகாத நிலையில் பண்டசாலைப்படுத்தி வைக்கவும் அவசியம் ஏற்படுகின்றது.

இந்த மூன்று விடயங்களையும் அனுசரிப் பதற்கு பின்வரும் காரணங்கள் பொருத்தமாக வுள்ளன:-

* உணவுப் பொருட்கள் கெட்டு அல்லது பழு தடைந்து அல்லது அழுகிப் போயிருந்தால் அவற்றைப் பாவனையாளர்களோ, வர்த்த கர்களோ வாங்கமாட்டார்கள்.

* சிறந்த பொருட்களுக்கே பாவனையாளர் கள் அதிக விலை கொடுப்பார்கள். இதன் மூலம் உற்பத்தியாளரும், வர்த்தகர்களும் லாபம் அடை யலாம்.

* மிகவும் கவனமாகப் பண்டசாலைப்படு த்தி வைக்கப்படும் பொருட்களே நீண்ட நாட்க ளுக்குக் கெட்டுப் போகாமல் இருக்கும். அவற் றுக்கே சந்தையில் மதிப்பு ஏற்படும்.

* சந்தைப்படுத்தல் எந்த வித இடையூறும் இன்றி மிகவும் சுலபமாக நடைபெறும்.

* உற்பத்திப் பொருட்களின் சந்தைப்படுத் தல் விரிவடையும்.

* அவற்றைத் தூர இடங்களுக்குக் கொண்டு செல்லும் வசதியும் ஏற்படுகிறது.

**பொதிப்படுத்தல்**

சந்தைப்படுத்தலுக்கான பெரும்பாலான பழங்களினதும், மரக்கறிகளினதும் மற்றும் உபஉணவுப்பொருட்களினதும் ஏற்றியிறக் கலுக்காகவும், பண்டசாலைப்படுத்தலுக்காக வும் பொதிப்படுத்தல் அவசியமாகும். இதன் பொருட்டு சாக்குகள், கூடைகள், பெட்டிகள் ஆகி யன பாவிக்கப்படுகின்றன. இவற்றின் மூலம் பொருட்களை மிக இலகுவில் எடுத்துச் செல்ல லாம். அத்துடன், பொருட்கள் பழுதடைவதும் தவிர்க்கப்படுகிறது. ஆனால், எவ்வகையான பொருட்களை எந்த மாதிரி பொதியிட வேண்டும் என்பதில் கவனம் செலுத்துவது அவசியம். சாக்குகள், கூடைகள், பெட்டிகள் போன்றவற்றில் எத்தகைய பொருட்களையும் அடைக்கலாம் என்பதை நன்றாக யோசித்து முடிவெடுக்க வேண்டும்.

உற்பத்திப் பொருட்களை இங்கு குறிப்பிடப் பட்டுள்ள ஏதாவதொரு முறையில் பொதியிடப் படுவதால் அந்த வகையான பொதியை ஏற்றி இறக்குவதில் எந்தவித கஷ்டமும் இருக்காது. அந்தப் பொருட்கள் நல்ல நிலையில் சந்தையை அடையக் கூடியதாக இருக்கும்.

(தொடரும்...)

# நிறுவனத் துறையினது செயற்பாடுகளும், தேவைகளும்



இலங்கையில் பல தமிழர்கள் வெளிநாட் டுக்கு அகதிகளாகவோ, தொழில் வாய்ப்பு கருதியோ அல்லது கல்வி வாய்ப்பு கருதியோ சென்றுள்ளனர். இதன் காரணமாக உள்ளூரில் வரும் வருமானத்தை விட அதிக வருமானம் கிடைப்பதுவும், அதனால் போட்டித் தன்மை யுடன் மக்கள் சிறந்த பலனைப் பெற்றுக்கொள்ள முயல்வதையும் நாம் அன்றாடம் காணக் கூடியதாகவுள்ளது. இதற்கு ஒரு உதாரணம் தான் பல வீடுகள் அவசரமாக கட்டப்பட்டு, விற்கப் படுகின்றதைக் காணலாம்.

பல தொழில் நிறுவனங்கள் தமது தலைமை அலுவலகத்தை கொழும்பிலும் அல்லது வடக்கு- கிழக்குக்கு வெளியிலும் மற்றும் ஓர் கிளையை யாழ்ப்பாணத்திலும் திறப்பது ஆகும். இதற்கு பல சாதகமான காரணங்கள் நிறுவனத்துறை யினரைப் பொறுத்தவரை கூறக்கூடியதாக இருப்பினும், பிரதானமாக ஒரு காரணமாக அமைவது நிறுவனத்துறையினர் அவதானிப் பில் யாழ்ப்பாணம் போன்ற பிரதேசத்தில் அதிக மக்கள் வாழ்கின்றனர். பெருமளவு நிதிப் புழக் கம் யாழ்ப்பாணத்தில் காணப்படுகிறது. யாழ்ப் பாண மக்கள் பலர் வெளிநாட்டு கல்வி வாய் ப்பை பெறமுடியவில்லை. எனவே, தாம் அவர் களுக்கு இந்த வாய்ப்பை வழங்குவோம் என்ற நோக்கத்துடன் முன்வருகின்றார்கள்.

யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலைக்குப் பொருத்தமில்லாத பல பொருட்கள்,சேவைகள் வழங்கப்படுவதாகப் பலரும் கருத்துக் கொண் டுள்ளனர். அத்துடன் இந்தத் துறைகள் வளர்ச் சியடைந்த யாழ்ப்பாணம் ஒன்றைக் கட்டி யெழுப்ப உதவும் என்கின்ற போதும் அதற்கு கட்டுமான துறையில் காணப்படும் கட்டுப்பாடு கள், தடைகள் காரணமாகத் தடைப்படலாம் என்னும் கருத்தும் காணப்படவே செய்கிறது.

மக்களின் கருத்து இவ்வாறு வலுப்பெற்று வரும் பொழுதும், நிறுவனத்துறையினர் இலா பத்துடன் கூடிய சேவையை மக்களுக்கு கொடுத்து வருகின்றனர் எனலாம். ஆனால், மக்களின் கருத்துப்படி பார்க்கும் போது ஒரு பாரிய பிரச்சினையாக அதிவேகமாக வளர்ச்சிய டைந்து வரும் தொழில்நுட்பம், தகவல் தொழில் நுட்பம் இப்படிப்பட்ட மக்களின் அச்ச உணர்வை ஏற்படுத்தும் என்பதில் மறுப்பதற்கு இல்லை.

ஏனெனில், கணக்கியலை கணினி யில் செய்யும் தொழில்நுட்பம் தெரிந்த ஒருவர் அதனைக் கற்பதற்குப் பணம் செலுத்தியிருப் பார். ஆனால், தொழில்நுட்ப நவீன கண்டு பிடிப்பால் இன்னுமோர் கணக்கியல் வழி முறை அதைவிட சிறந்ததாகப் பயன்படுத்தக் கூடியதாகக் காணப்படுமாயின் அப்போது யாழ்ப்பாணத்தில் கணினி மூலம் கணக்குப் பதிவியல் நடைமுறை பல கடை கள், தொழில் ஸ்தாபனங்களில் நடைமுறையில் இருப்பின் முன்பு கற்ற கணக்கியல் சார் கணினிக்கல்வி பயனற்று காணப்படும். இதுவே மக்களின் பிரச்சினையாகும்.

ஆனால், இங்கு படித்து விட்டு தொழில் வாய்ப்பு தேடி கொழும்பு அல்லது வெளிநாட் டுக்கு சென்று தொழில் தேடிக்கொள்ளலாம் எனவும், ஒரு மக்கள் பகுதியில் கூறப்படும் போதும் உண்மையில் கொழும்பில் இவரு டைய தங்குமிடம், உணவுச் செலவுகள் இவரது வருமானத்துக்கு அமைய வேண்டும். அதே போல் வெளிநாட்டு தொழில்வாய்ப்பு என அமையும் போது நிறுவனத்துறையில் வேலை செய்பவர் அந்த நாட்டு பிரஜையாக கவனிக் கப்படவேண்டும். அப்போது தான் இவருடைய கல்வித்தரத்துக்குரிய வருவாயை உழைத் துக்கொள்ள முடியும். இல்லாவிடின், குறைந்த சம்பளத்துடன் அதிகளவான ஊழியர் வேலை யைக் கொடுக்க வேண்டி ஏற்படும். இதுவே தற் போது இலங்கைத் தமிழரின் வெளிநாட்டு நிலைமையாகும்.

இதனால் நிறுவனத்துறையினர் பொருட் கள், சேவைகள் அளிப்பதுடன் மட்டும் அல் லாது, அதனுடன் தொடர்புடைய வாய்ப்புக் களையும் வடக்கு - கிழக்குப் பகுதியில் உரு வாக்க வேண்டும் அல்லது உருவாக்குபவர் களுக்கு ஊக்கமளிக்க வேண்டும். இது காலத் தின் தேவையாக உருவெடுத்ததுடன் சமூகத் தின் பொறுப்பாகவும், பாதுகாப்பையும் உரு வாக்கவேண்டியுள்ளது என்பதே யதார்த்தம்.

- வணிகன் -

# திட்டமிட்டு தமிழ் மாணவர்களைக் கடத்தி அவர்களின் கல்வியை சீர்குலைக்க முயற்சி

## எஸ்.தாயகன் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு—

அரசு - தமிழ் மாணவர்களை கடத்தி, அவர்களின் கல்வியை முடக்க முற்படுகின்றனர். அரசின் திட்டமிட்ட இந்தச் சதியை மக்கள் சற்று உணர்ந்து செயற்பட வேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்ட தமிழீழ கல்விக்கழகத் துணைப் பொறுப்பாளர் எஸ்.தாயகன் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை மாவட்ட கல்விக் கழகப் பணிமனையில் உயர் தர வகுப்பு மாணவர்களின் பெற்றோர்களைச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாணவர்கள் கடத்தப்படுவது யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா போன்ற மாவட்டங்களில் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதில் பெற்றோர்கள் அனைவரும் மிகவும் உன்னிப்பாக இருக்க வேண்டும். பாடசாலைகளில் ஆசிரியர் ஆளணி, கட்டடப் பற்றாக்குறை, இயற்கை அனர்த்தங்களின் அழிவு போன்ற வற்றாலும் மாணவர்கள் சோர்ந்து போயிருக்கும் நிலையில் அவர்களுக்கு வேதனையைக் கொடுக்கும் விடயமாக இந்தச் சம்பவம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

## கோத்தபாயவின் இந்தியப் பயணம் ரத்து

கொழும்பு—

இந்தியாவுக்கு இன்று பயணம் மேற்கொள்ளும் குழுவில் பாதுகாப்பு அமைச்சு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இடம்பெறவில்லை என்று கூறப் படுகிறது.

மகிந்தவின் பாகிஸ்தான் பயணத்தைத் தொடர்ந்து இந்தியாவைத் திருப்திபடுத்தும் வகையில் அரசு அதிகாரிகள் கொண்ட ஒரு குழுவை அனுப்ப அரசு முடிவு செய் திருந்தது.

வெளிவிவகார அமைச்சின் செயலாளர் எச்.எம்.ஜி.எஸ் பாலிகாகார தலைமையிலான இந்தக்குழுவில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் இடம் பெற்றிருந்தார்.

ஆனால், தற்போது கோத்தபாய இந்தியப் பயணம் மேற்கொள்ள மாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## தவக்கால வழிபாடு

கொக்குவில் —

ஈழத்துக் கல்வாரி என்றழைக்கப்படும் யாழ்.அடைக்கல அன்னை ஆலயத்தில் தவக்கால வழிபாடுகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். மாலை 5 மணிக்கு சிலுவைப்பாதை, திருப்பலி, ஆசந்தி என்பவற்றை குருமுதல்வர் அருட்திரு யே.நீக்கிலஸ் அடிகளார் நடத்தி வைப்பார்.

9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு குருத்தோலை பவனி திருப்பலி, 8.30 மணிக்கு திருப்பலி, 13 ஆம் திகதி பெரிய வியாழக் கிழமை மாலை 5.30 மணிக்கு திருப்பலி, இரவு 11 மணிக்கு பொது திருமணித் தியாலம், 14 ஆம் திகதி பெரிய வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு சிலுவைப் பாதை, திருச்சிலுவை வழிபாடு. 15 ஆம் திகதி பெரிய சனிக்கிழமை இரவு 11.30 மணிக்கு திருவிழிப்பின் பலி. 16 ஆம் திகதி உயிர்த்த பெருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். (206)

## அரசியல் யாப்பு சபை தொடர்பான மகிந்தவின் முடிவுக்கு குஷ்நகன் எதிர்ப்பு

கொழும்பு —

அரசியல் யாப்பு சபையை மாற்றும் வழிகளுடாக தேர்தல் சீர்திருத்தம் மேற்கொள்வதற்கு ஜனாதிபதி மகிந்த மேற்கொள்ளும் முயற்சிக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக்குழுத் தலைவர் குஷ்நகன் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேற்கொள்ளும் இத்தகைய முயற்சி அரசியல் யாப்புக்கு ஏதிரானது.

ஜே.வி.பி.யினருக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையே ஒரு உறுப்பினர் பதவி தொடர்பாகச் சர்ச்சை நீடிப்பதில் அர்த்தம் இல்லை.

ஏன் இருதரப்பினரும் இந்த உறுப்பினர் பதவிக் காலத்தை பகிர்ந்து கொள்ளகூடாது?

இலங்கையில் நல்ல நிர்வாகம் நடத்தப்பட வேண்டுமாயின் சுயாதீனமான தேர்தல் ஆணைக்குழு அமைக்கப்பட வேண்டியதும் அவசியமானது என அவர் மேலும் தெரிவித்தார்.

# கண்ணிவெடி அகற்றலுக்கான நிதியை ரத்துச் செய்தது ஐரோப்பிய ஒன்றியம்

கொழும்பு —

இலங்கையில் கண்ணிவெடி அகற்றலுக்கான நிதியை ஐரோப்பிய ஒன்றியம் இரத்துச் செய்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற சர்வதேச கண்ணிவெடி விழிப்புணர்வு நாள் நிகழ்வில் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதி ஜுலியன் வில்சன் உரை நிகழ்த்தும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் கண்ணிவெடி அகற்றல் தொடர்பான பணிகளுக்கு மொத்தம் 32 மில்லியன் யூரோ ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 5.5 மில்லியன் யூரோவானது தொழில் நுட்பப் பணிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆனால், ஒட்டாவா மாநாட்டு ஒப்பந்தத்தில் இலங்கை கையெழுத்திடாத காரணத்தால், இந்த ஆண்டு கண்ணிவெடி அகற்றலுக்கான நிதியை எம்மால் ஒதுக்க இயலாது.

ஒப்பந்தத்தில் இலங்கை கையெழுத்திடும்போது 2007ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து நிதி உதவி அளிக்கப்படும். இது கண்ணிவெடி அகற்றலுக்கான இந்த நிதி அல்ல தொழில் நுட் பப் பணிகளுக்குத்தான்.

அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே புரிந்துணர்வையும், நம்பிக்கையையும் கட்டியெழுப்ப இருதரப்பினரும் இணைந்து ஒப்பந்தத்தில் கையெழுத்திடலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.



யாழ்.சிவலிங்க யோககேந்திரா நிறுவனத்தால் அண்மையில் திருநெல்வேலி சைவ சிறுவர் இல்லத்துக்கு ஒருதொகுதி நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. சிவலிங்க யோககேந்திரா நிறுவன இயக்குநர் க.நிஜலிங்கம் - சைவ சிறுவர் இல்ல செயலாளர் பசுபதியிடம் கையளித்தபோது, அருகில் யோகேந்திரா நிறுவன செயலாளர் எஸ்.சோதிமூர்த்தி மற்றும் உறுப்பினர்களை முதலாவது படத்திலும் - சைவ சிறுவர் இல்ல மாணவர்கள் யோகாசனப் பயிற்சியில் தியானத்தில் ஈடுபட்டிருப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். (82)

## சிரமதானம்

சங்கானை—

சித்தங்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகத்தின் 50 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு பொன் விழாவுக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

எதிர்வரும் 15 ஆம் 16 ஆம் திகதிகளில் சித்தன்கேணி பிள்ளையார் ஆலய முன்றலில் இந்த விழா இடம் பெறவுள்ளது. இதனை முன்னிட்டு யாழ்- பொன்னாலை வீதியில் அமைந்துள்ள சித்தன்கேணியை சிரமதானம் மூலம் துப்பரவு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன், சித்தன்கேணி சிவன் கோவில் பிள்ளையார் கோவில் சுற்றாடலையும் இந்த இளைஞர்கள் சிரமதானம் மூலம் துப்பரவு செய்துள்ளதோடு, அன்றையதினம் பல கலைநிகழ்ச்சிகளையும் நடத்தவுள்ளனர். (48)

# ஏகாதசி பூஜை

கொக்குவில்—

அளவெட்டி தெற்கு நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஏகாதசி விரதபூசை பக்திபூர்வமாக இடம்பெறவுள்ளது.

காலை 8 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகி 9 மணிக்கு வசந்த மண்டப பூசை நடைபெற்று 10 மணிக்கு ஸ்ரீமத் நாராயண சுவாமி தேவியார் சகிதம் திருவீதி எழுந்தருள்வார். (206)

# கணவனுக்காக வாதாடும் மனைவியின் கடிதம் இது!

யாழ்ப்பாணம் —

தங்களது பத்திரிகையின் 5 ஆவது பக்கத்தில் 20.03.2006 இல் ''மானியங்கள் ஆணைக்குழுவின் செயலைக் கண்டித்து ஊழியர் சங்கம் தொழிற்சங்கப் போராட்டம் நடத்த முடிவு'' என்ற தலைப்பில் வெளிவந்த செய்தி தொடர்பாக பின்வரும் விளக்கம் தர விரும்புகிறேன். தயவு செய்து இதையும் வெளியிட்டு உதவவும்.

பிரதம பாதுகாப்பு அதிகாரி நியமனம் தொடர்பாகப் பேரவையால் சிபாரிசு செய்யப்படாத ஒருவருக்குப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நியமனக்கடிதத்தை வழங்கியுள்ளது இது சரியல்ல. இதற்கான எனது விளக்கம்

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழகச் சட்டத்தின் பிரிவு 71(2) பந்தி (II) இல் குறிப்பிடப் பட்டுள்ளதாவது -

1. இந்தப் பதவிக்கு நியமன அதிகாரி மானியங்கள் ஆணைக்குழுவென்றும்,

2. இந்த நியமனத்தை வழங்குவதற்குப் பூரண அதிகாரம் அவர்களுக்கு உண்டெனவும்,

3. பேரவையின் சிபார்சினை ஏற்பதா? அல்லது நிராகரிப்பதா? என்ற முடிவைத் தீர்மானிக்கும் அதிகாரம் அவர்களுக்கு மட்டுமே உரியது என் றும்,

4. அத்துடன் அவர்களின் முன் அனுமதியின்றிப் பேரவைகளால் எடுக்கப்படும் எந்த விதமான தீர் மானங்களும் சட்டவலு அற்றவை என்றும் பல்கலைக்கழக தாபனக் கோவையில் தெளிவாகக் கூறிப்பிடப் பட்டுள்ளது.

## வாசகர் நோக்கு...

மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றுநிருபம் இல 30 இலும் -

துணைவேந்தர் ஊடாக வழங்கப்பட்ட இந்த நியமனத்தைச் சம்பந்தப்பட்டவருக்கு வழங்குமாறு, உடனடியாகவே எந்தவித தயக்கமுமின்றித் துணைவேந்தர் பணித்துள்ளார்.

எனது கணவரது முகவரி இடப்பட்டு, துணைவேந்தர் ஊடாக உரிய முறைப்படி ஆணைக்குழுவால் அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தை அவரிடம் ஒப்படைப்பது துணை வேந்தரின் கடமையாகும். இதற்கு அவர் ஏன் தயங்க வேண்டும்?

பல்கலைக்கழப் பேரவையால் சிபார்சு செய்யப்படாத ஒருவருக்கு நியமனத்தை வழங்கப் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அதிகாரமில்லை எனச் சுட்டிக் காட்டிய பின்னரே துணைவேந்தர் இந்த விடயத்தைப் பேரவையின் பரிசீலனைக்குவிட நடவடிக்கை எடுத்தார் என்பது மற்றொரு கேள்வி இதற்கு -

துணைவேந்தருக்குரிய சட்டப் பிரிவுகளைச் சுட்டிக்காட்டி அவ்வரை நல்வழியிற் செலுத்துவதே தொழிற் சங்கத்தின் நோக்கமாக அமைய வேண்டும். இவர்கள் மாத்திரமின்றி, பதிவாளர் முதல் உதவிப்பதிவாளர்கள் ஈறாக இவை சம்பந்தமான சட்டப் பிரிவுகளைச் சுட்டிக்காட்ட முன்வர வேண்டியது அவர்களின் கடமையாகும்.

பிரதம பாதுகாப்பு அதிகாரியை நியமிக்கும் அதிகாரம் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவுக்கு இருந்த போதிலும், எனது கணவரது நியமனம் பல்கலைக்கழக மேன் முறையீட்டுநீதிமன்றம்வரை கொண்டு செல்லப்பட்டு, இரு ஆண்டுகளின் பின் அவர்களின் அறிவுறுத்தலுக்கு அமையவும், அனுமதியுடனும், பல்கலைக்கழக மானிய ஆனைக்குழுவால் அவருக்கு வழங்கப்பட்ட பின்னரும், அவரைப் பிரதம பாதுகாப்பு அதிகாரிக்குரிய பதவியையும், கடமையையும் 15.03.2006 இல் இருந்து பொறுப்பேற்கவிடாது, தடையாக இருத்தல் மனித உரிமை மீறல் என்றே என்னாற் கருதமுடிகிறது.

இந்த நியமனக்கடிதம் 02.03.06 இல் திகதியிட்டுப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவரால் ஒப்பமிடப்பட்டு அனுப்பிவைக் கப்ட்டுள்ளது என்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

திருமதி.வி.இரவீந்திரா
பிரதம பாதுகாப்பு அதிகாரியாகப் பணியாற்றிய வி.இரவீந்திராவின் மனைவி.

# வான் சேவைகளும், கட்டண வேறுபாடுகளும்!

யாழ்.பருத்தித்துறைப் பாதையில் 750 இலக்க மினிவான் சேவையில் அண்மைக்காலமாக கடுகதி சேவையென்று ஒன்று ஆரம்பிக்கப்பட்டு மேற்படிதூரத்தை 45 நிமிடங்களில் சென்றடைவது அவசரகருமங்களுக்காகச் செல்வோருக்கு பெரிய வரப்பிரசாதமாகும்.

சாதாரண வான் சேவைக் கட்டணமாக பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பயணத்துக்கு 32 ரூபா அறவிடப்படுகிறது. கடுகதிக்கு 37 ரூபா அறிவிடப்படுகிறது. நியாமானது.

ஆனால், நெல்லியடி - யாழ்ப்பாணம் சாதாரண வான் சேவைக் கட்டணம் 28 ரூபா. கடுகதிக்கு 37ரூபா. பருத்தித்துறைப் பிரயாணிகளை விட நெல்லியடிப் பிரயாணிகள் தண்டமாக 4 ரூபா கூடுதலாகச் செலுத்த வேண்டும். அத்தோடு கடுகதிவான் நெல்லியடிக்குப் பருத்தித்துறையிலிருந்து வரும்போது வசதியான இருக்கைகள் நிறைந்து நடுப்புறமாக குட்டி இருக்கைகள் மட்டுமே மிஞ்சியிருக்கும். இவற்றையே நெல்லியடிப் பிரயாணிகள் தண்டமாகப் பாவிக்கவேண்டும். இதற்கு மாற்றுவழியுண்டா?

பத்மராஜா. நெல்லியடிப் பயணி -

# ஆசிரியர்களும் பாடம் படிக்க வேண்டும்!

03.04.2006 நமது ஈழநாட்டில் வெளிவந்த ''ஆசிரியை தாக்கி மாணவி காயம்'' என்ற செய்தி அனைத்து வாசக நெஞ்சங்களையும் நிச்சயம் ஒருதடவை திடுக்கிட வைத்திருக்கும். சிறுவர் உரிமைகள்! சிறுவர் மேம்பாடு! அவர்கள் சுதந்திரம், என்று வாய்கிழியப் பேசிவரும் எமது சமூகத்துக் குள்ளேயே இப்படியான் கொடுமையான சம்பவங்கள் இடம்பெறுவது பெரும் வேதனையானதே!


ஒரு சில ஆசிரியர்களின் செயற்பாடானது. அனைத்து ஆசிரியர் சமூகத்திற்கே இழுக்கைத் தேடிக்கொடுக்கும் என்பதோடு சிறுவர்களை கையாளும் பக்குவம் பற்றி ஆசிரியர்களுக்கு போதிக்கப்படுவதில்லையோ என்றும் எண்ணத் தோன்றுகிறது. இதுபோன்ற ஆசிரியர்களால் சமுதாயத்தை முன்னேற்றப்பாதைக்கு கொண்டு செல்ல முடியாது. மாறாக வன்முறை நிறைந்த ஒரு அழிவுப் பாதைக்கே இட்டுச் செல்லும். இதை சம்பந்தப்பட்டவர்கள் உணருவார்களா?

இந்திரகுமார். யாழ்ப்பாணம்.

# கண்ணிவெடிகளை அகற்றி மக்களை மீளக்குடியமர்த்துவதே எமது நோக்கம்!

## யுனிசெப் நிறுவன வன்னி வதிவிடப்பிரதிநிதி தெரிவிப்பு





கிளிநொச்சி—

போர் இடம்பெற்ற 11 இடங்களில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை அகற்றி, மக்களின் மீள்குடிமர்வுக்கு வழி செய்வதே இன்றைய பிரதான குறிக்கோளாகும் என யுனிசெப் நிறுவன வன்னி வதிவிடப் பிரதிநிதி பெனி புறூன் தெரிவித்தார்.

கிளிநொச்சி - மத்திய கல்லூரியில் இடம்பெற்ற கண்ணிவெடி விழிப்புணர்வும், செயற்பாடுகளின் உதவிக்குமான நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - உலகிலே போர் இடம்பெற்ற நாடுகளில் கண்ணிவெடிகளில் சிக்கி பல அப்பாவிகள் உயிர்களை இழந்துள்ளனர்.

எனவே, கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு இன்றைய நாளில் எல்லோரும் ஒன்றிணைந்து பாடுபட உறுதி எடுத்துக்கொள்வோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியை மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவைச் சேர்ந்த செல்வம் ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வின் கருத்துரைகளை - யுனிசெப் நிறுவனத்தின் வன்னிக்கான வதிவிடப் பிரதிநிதி பெனி புறூன், கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகம், முன்னாள் கிளிநொச்சி மாவட்ட கலவிப் பணிப்பாளர் க.கந்தசாமி, வெண்புறா நிறுவன இணைப்பாளர் சந்திரசேகரம்பிள்ளை, ஜெயந்தி, கந்தசாமி, சண்முகப்பிரியா ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து கண்ணிவெடி விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் வகையில் மகளிர் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் வீதி நாடக நிகழ்வு, கண்காட்சி என்பன இடம்பெற்றன.

தமிழர் தாயகத்தில் 1996 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குப் பின்னர் வெடிபொருட்களின் ஆபத்துக்கள் உணரப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தில் பெருமளவு நிலப்பரப்புக்களில் வெடிபொருட்களின் ஆபத்துள்ளது. இதனால் சுமார் ஐயாயிரம் குடும்பங்கள் மீளக்குடியமர முடியாதுள்ளன. தமிழர் தாயகத்தில் வெடிபொருட்களால் 18 ஆயிரத்து 360 குடும்பங்கள் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையால் ஏப்ரல் 4 ஆம் திகதி அனைத்துலக கண்ணிவெடி விழிப்புணர்வு செயற்பாட்டு நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (கு)

# ஆழ்கடலில் மீன்பிடிப்பதற்கு கடற்தொழிலாளர் அச்சம்!

வடமராட்சி கிழக்கு—

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் ஆழ்கடல் தொழிலில் ஈடுபட்ட அனைத்துத் தொழிலாளர்களும் கடற்தொழில் செய்வதை முற்றாக நிறுத்தியுள்ளனர்.

அண்மையில் ஆழ்கடலுக்கு கடற்தொழிலுக்குச் சென்ற மூன்று கடற்தொழிலாளர்களைக் கடற் படையினர் படகில் இருந்து தூக்கி கடலில் வீசியமை, படகுகளை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தமை, கடற்தொழிலாளர்களை துப்பாக்கியைக் காட்டி அச்சுறுத்தியமை ஆகிய காரணங்களாலேயே ஆழ்கடலுக்குச் சென்று கடற்தொழில் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகக் கடற் தொழிலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (21)

# ஊடகவியலாளர் கனகரவியின் பொங்குதமிழ் நூல் அறிமுகவிழா

வவுனியா—

ஊடகவியலாளர் கனகரவியின் பொங்குதமிழ் நூல் அறிமுகவிழா - வவுனியா கனகராயன்குளத்தில் நியாப் பயிற்சி நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஆசிரியர் நிலைய முகாமையாளர் ஜெயச்சந்திரன் தலைமையில் அண்மையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - பொதுச்சுடரை அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் வன்னி மாவட்டத் தலைவர் ஏ.கே.செந்தில்நாதன் ஏற்றிவைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியை கனகராயன்குளப் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் முல்லைமணி ஏற்றிவைத்தார்.

அன்னைபூபதியின் திருவுருவப் படத்துக்கு வவுனியா மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் செந்தில்நாதன் ஈகச்சுடரேற்றி, மலர் மாலை அணிவித்தார்.

நூலின் பிரதிகளை வவுனியா மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் சுபாஸ் வழங்கினார்.

நூலுக்கான ஆய்வுரையை பாடசாலை அதிபர் நாகராசா நிகழ்த்தினார். (03, கு)

# உழவு இயந்திர உரிமையாளர் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடல்

முல்லைத்தீவு—

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேச உழவு இயந்திர உரிமையாளர் சங்க அங்கத்தவர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறை செயலகத்தில் முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செம்மணன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - முல்லைத்தீவு மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் முரளி கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார்.

இந்தக் கலந்துரையாடலில் உழவு இயந்திர உரிமையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. (பூ, கு)

# காசநோய் விழிப்புணர்வு!

கிளிநொச்சி—

சர்வதேச ரீதியில் காசநோய்த் தாக்கம் படிப்படியாக அதிகரித்து வருவதுடன், எமது தாயகப் பகுதியிலும் காச நோயின் தாக்கம் அதிகரித்து வருவதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

இதைக் கருத்திற் கொண்டு 2006 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தை காசநோய் விழிப்புணர்வு மாதமாக தமிழீழ சுகாதார சேவையினர் பிரகடனப்படுத்தி, தாயகப் பிரதேசமெங்கும் பல்வேறு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

அத்துடன், 2008 ஆம் ஆண்டில் எமது பிரதேசங்களில் காச நோயைப் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் இலக்கை முன்னிறுத்தியே தமிழீழ சுகாதார சேவையினர் செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# 2 ஆம் லெப். மார்ஷல் பயிற்சி பாசறையில் இரண்டாவது அணிக்கான பயிற்சி ஆரம்பம்

மன்னார்—

மன்னார் வெள்ளாங்குளம் பிரதேசத்தில் இரண்டாம் லெப்டினன்ட் மார்ஷல் பயிற்சிப்பாசறையின் இரண்டாவது அணியினருக்கான பயிற்சிகள் ஆரம்ப நிகழ்வு - கடந்த 30 ஆம் திகதி நடைபெற்றது.

மன்னார் - வெள்ளாங்குளம் பிரதேச அரசியற்துறை பொறுப்பாளர் குணதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் -பொதுச்சுடரை மன்னார் மாவட்ட கொள்கை முன்னெடுப்புப் பிரிவுப் பொறுப்பாளர் ஏற்றிவைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியை இலுப்பைக் கடவைக் கோட்ட அரசியற்துறை பொறுப்பாளர் அன்பு ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வில் கருத்துரைகளை கொள்கை முன்னெடுப்பு பிரிவைச் சேர்ந்தசுதன், பயிற்சியாசிரியர் பாக்கியவான் ஆகியோர் நிகழ்த்தினர். (பூ)

# மக்கள் வங்கிக் கிளை புதுக்குடியிருப்பில் திறப்பு

புதுக்குடியிருப்பு—

மக்கள் வங்கியின் முல்லைத்தீவு கிளை கடந்த திங்கட்கிழமை காலை புதுக்குடியிருப்பு - பரந்தன் வீதியில் திறந்து வைக்கப்பட்டது.

மக்கள் வங்கி புதுக்குடியிருப்பு முகாமையாளர் பாலராசா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் - பொதுச்சுடரை முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செம்மணன் ஏற்றிவைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியை புதுக்குடியிருப்பு கோட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் புகழரசன் ஏற்றி வைத்தார். மக்கள் வங்கிக் கொடியை பிரதேச முகாமையாளர் ஆனந்தராசா ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் செ.தயானந்தா வங்கிக் கிளையைத் திறந்து வைத்தார். (கு)

# நிரந்தர வீடுகளுக்கான அடிக்கல் நாட்டுவிழா

முல்லைத்தீவு—

முல்லைத்தீவு - கள்ளப்பாடு வடக்குக் கிராமத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் நிரந்தர வீடுகள் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு - கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நீர் சுகாதாரப் பகுதி அமைப்பாளர் அ.நாகேந்திரம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் -அடிக்கற்களை வணபிதா ஏ.ஜெயக்குமார், வணபிதா எஸ்.ஏ.ஆனந்த், வணபிதா பொ.அனுகூல், வணபிதா ஜே.தேவகுருச்செல்வம் ஆகியோர் நாட்டிவைத்தனர்.

தென்னிந்திய திருச்சபையின் நிதிப்பங்களிப்புடன் முல்லைத்தீவு - கள்ளப்பாடுவடக்கு கிராமத்தில் 100 நிரந்தர வீடுகள் அமைப்பதற்கான ஒப்பந்தம் அண்மையில் இடம்பெற்றிருந்தது. முதற்கட்டமாக 25 வீடுகள் அமைப்பதற்கான அடிக்கற்கள் நாட்டப்பட்டன.

இதில் தமிழர் புனர்வாழ்வுக் கழக திட்டமிடல் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி, தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் சுனாமி மீள்கட்டமைப்புப் பணிப்பாளர் வின்சன், தென்னிந்திய திருச்சபை திட்ட மேலாளர் ஜி.ராஜநாயகம் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (கு)

# சின்னஞ்சிறு செய்திகள்

## பலநோக்கு கூட்டுறவு சங்க கிளை திறப்பு!

வவுனியா—

வவுனியா வடக்கு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் இந்துபுரம் கிளை கடந்த திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

கிளை மேற்பார்வையாளர் ந. சுஜேந்திரன் தலைமையில் காலை 11.30 மணிக்கு நடைபெற்ற இந்த நிகழ்வில்- திருமுறிகண்டி, இந்துபுர கிராம அலுவலர்கள், இயக்குனர், மாதர் சங்கத்தினர், தென்னிந்திய திருச்சபை பங்குத்தந்தை மற்றும் வர்த்தக சங்கத்தினர் எனப் பெருமளவான மக்கள் கலந்து கொண்டனர். (கு)

## குறுகிய கால பயிற்சி நெறி

மன்னார்—

மன்னார் மாவட்டத்தில் இலங்கை தொழில் பயிற்சி அதிகாரசபை ஜனாதிபதி நிதியத்தின் கீழான குறுகிய கால பயிற்சி நெறி - மன்னார் சிங்கள மகா வித்தியாலயத்தில் இன்று ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறியில் மேசன் வேலை, கைத் தொழில் போன்ற பயிற்சி நெறிகள் பயிற்றுவிக்கப்படவுள்ளன. இந்தப் பயிற்சி நெறிக்கான நேர்முகப் பரீட்சை மன்னார் பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

இந்தப் பயிற்சி நெறியில் பயிற்சிக் காலத்தில் நாளொன்றுக்கு 200 ரூபா கொடுப்பனவாக வழங்கப்படவுள்ளது. (201)

## தவக்கால தியானம்!

மன்னார்—

மன்னார் மாவட்டத்திலுள்ள அரச ஊழியர்களுக்கான தவக்கால தியான நிகழ்வு கடந்த 30 ஆம் திகதி மன்னார் புனித செபஸ்தியான் பேராலயத்தில் நடைபெற்றது.

அருட்தந்தை சு.விக்ரர் சூசை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் 300 இற்கும் மேற்பட்ட அரச ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

இந்தத் தவக்கால வழிபாட்டில் தியான உரையை இந்தியாவிலிருந்து வந்த யேசுசபை குழு முதல்வர் அருட்தந்தை ஏ.சிறில் நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கது. (201)

## வீடு கட்ட தேவையான உபகரணம் வழங்கல்

முல்லைத்தீவு—

சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் 3 கிராமங்களுக்கு ஜேர்மனிய செஞ்சிலுவைச் சங்கம் வீடுகள் அமைப்பதற்குத் தேவையான உபகரணங்களை வழங்கவுள்ளது.

வண்ணாங்குளம், உப்புவெளி, செம்மலை ஆகிய கிராமங்களுக்கே இந்த உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

ஒவ்வொருவருக்கும் தலா 12 இலட்சம் ரூபா பெறுமதியான வீடு கட்டத் தேவையான பொருட்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு)

## கருத்தரங்கு!

விசுவமடு—

விசுவமடு பிரதேச மக்களுக்கான சமகால அரசியல் கருத்தரங்கு அண்மையில் விசுவமடு மாவீரர் மண்டபத்தில் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது.

இதில் கருத்துரைகளை தேசிய எழுச்சிப் பேரவைத் தலைவர் புஸ்பராசா, விசுவமடு பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் சோழநிலவன், சிறப்பு வேலைத்திட்டப் பொறுப்பாளர் நர்மதன் ஆகியோர் நிகழ்த்தினர்.

## நோயாளர்களின் தொகை அதிகரிப்பு

மன்னார்—

மன்னார் மாவட்ட வைத்தியசாலைக்கு சிகிச்சைபெற வரும் நோயாளிகளின் தொகை அண்மை நாட்களாக அதிகரித்துள்ளது.

காய்ச்சல், கூவக்கட்டு போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டவர்களே பெருமளவாக சிகிச்சைக்கு வருகின்றனர்.

இதனால் நோயாளர் தங்கும் விடுதிகளில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது. அத்தோடு விடுதியில் உள்ள கட்டில்கள்யாவும் நிரம்பி, நோயாளர்கள் தரையில் பாய்களில் படுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (201)

## ஆளணிப் பற்றாக்குறை

வவுனியா—

வவுனியா வடக்குப் பிரதேச செயலகம் ஆளணிப் பற்றாக்குறையுடன் பல சிரமங்களின் மத்தியில் இயங்கி வருகிறது.

இந்தப் பிரதேச செயலகத்தில் உதவித் திட்டப் பணிப்பாளர் இல்லாத காரணத்தால் - வவுனியா வடக்குப் பிரதேச செயலர் வவுனியா அரச செயலகத்தில் இருந்து கிழமைக்கு ஒரு தடவை இந்தப் பிரதேச செயலகத்துக்குப் பணியாற்ற வருகின்றார்.

இங்கு 21 எழுதுநர்கள் பணியாற்ற வேண்டிய இடத்தில் 5 எழுதுநர்கள் மட்டுமே பணயாற்றி வருகின்றனர். இதனால் மக்களுக்கான பணிகளை நிறைவேற்றுவதில் பல சிரமங்கள் உள்ளதாகப் பணியில் உள்ள அதிகாரிகள் தெரிவித்தனர். (பூ)

## மைதானம் அமைப்பு!

இராமநாதபுரம்—

இராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கென புதிய விளையாட்டு மைதானம் அமைக்கப்படவுள்ளது.

கல்மடுநகர் கிராம அபிவிருத்திச் சங்கம் தனது எல்லைக்குட்பட்ட மக்களின் பங்களிப்புடன், கல்மடுநகர் செந்தாரகை விளையாட்டுக்கழக வீரர்களின் ஒத்துழைப்புடன் இந்த மைதானத்தை அமைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

## உபகரணத் தொகுதி அன்பளிப்பு

வவுனியா—

வவுனியா மாவட்ட மருத்துவமனைக்கு வவுனியா மாவட்ட வர்த்தக சங்கத்தின் பிரதிநிதிகள் கடந்த திங்கட்கிழமை காது தொடர்பாக சிகிச்சை மேற்கொள்ளக் கூடிய உபகரணத் தொகுதியை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

இதன் மூலம் காது நோயால் பாதிக்கப்படும் நோயாளர்கள் சிறந்த பயனைப் பெற்றுக்கொள்வர் என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!

குடிபுறங் காத்துஓம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்.
- திருக்குறள்

## நமது நோக்கு

# உணரும் காலம் வரும்

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் பிரிகேடியர் ஜெனரல் ஹக்ரப் ஹொக்லன்ட், கடந்த மார்ச் 31 ஆம் திகதியுடன் தனது பணியில் இருந்து விடைபெற்றுள்ளார்.

நான்கு வருடமாக இலங்கையில் போர்நிறுத்த கண்காணிப்பில் ஈடுபட்டவர். இரு தரப்பினதும் நிலைப் பாடுகள் குறித்து தெளிவாக உணர்ந்து கொண்டவர். கண்காணிப்புக்குழுவின் துணைத் தலைவராகவும், தலைவராகவும் பணியாற்றியவர்.

விடை பெற்றுச் செல்லும் முன்பு இவர் அநேகமான ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு பேட்டி கொடுத்திருக் கிறார். அரச சார்பு ஏரிக்கரை வார இதழான சண்டே ஒப்சேவரும் இவரின் வாயைக் கிளறி, எப்படியாவது புலிகளுக்கு எதிரான கருத்தைப் பெற்றுவிட வேண்டும் என்று போராடி தோல்விகண்டிருக்கிறது.

இந்தப் பேட்டியில் ஹொக்லன்ட் பல முக்கியமான விடயங்களைச் சுட்டிக் காட்டியிருக்கிறார். அதாவது, துணை ஆயுதக் குழுவினரின் செயற்பாடு அரச கட்டுப் பாட்டுப் பகுதிகளில் இருப்பதை அவர் உறுதிசெய்துள் ளார்.

கடைசியாக கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் நேற்று முன்தினம் தகவல் வெளியிட்டபோதுகூட- வாழைச்சேனையில் கருணா குழுவின் ஆயுதச் செயற் பாடுகள் குறித்து அம்பலப்படுத்தியுள்ளார்.

இராணுவத்தளபதி சொல்கிறார் அரச கட்டுப்பாட்டு பகுதிகளில் எந்த ஆயுதக்குழுவும் கிடையாது என்று. பொலிஸ்மா அதிபர் சொல்கிறார் எம்மிடம் உள்ள ஒரே துணை ஆயுதப்படை விசேட அதிரடிப்படைதான் என்று.

அரசாங்கமும் சொல்கிறது எந்தத் துணை ஆயுதக் குழுவும் எம்மிடம் கிடையாது என்று. அப்படியானால் வாழைச்சேனையிலும் வேறு பிரதேசங்களிலும் கண் காணிப்புக்குழுவினரைச் சந்தித்த கருணா குழுவினர் ஆயுதம் தாங்கியிருந்தது எப்படி?

வாழைச்சேனையில் 15 பேர் கொண்ட ஆயுதக்குழு பொதுமக்களை மிரட்டி கூட்டம் நடத்தியது, இவர் களுக்கு படையினர் பாதுகாப்புக் கொடுத்தது எல்லாமே அரச கட்டுப்பாட்டு பகுதிகளில் ஆயுதக்குழுக்களின் செயற்பாடுகள் குறிப்பாக - கருணா குழுவின் செயற் பாடுகளை உறுதிப்படுத்துகிறதே.

ஜெனிவா பேச்சுக்களின் போது, துணை ஆயுதக் குழுக்கள் குறித்த ஆதாரங்களை வெளியிட்டு அரச கட்டுப்பாட்டு பகுதியில் எந்த ஆயுதக்குழுவும் செயற் பட அனுமதிக் கமாட்டோம் என்று வாக்குறுதி கொடுத்த அரசதரப்பு - அதனை நடைமுறைப்படுத்த முயற்சியே எடுக்கவில்லை.

மாறாக, தமது கட்டுப்பாட்டு பகுதியில் எந்த ஆயு தக்குழுவும் கிடையாது என்று சாதிக்கவே முற்படு கிறது. அரசாங்கமும் படைத்தரப்பும் நினைத்துக் கொண்டிருக்கின்றனர் போலும் - தாமே அதிபுத் திசாலிகள் என்று.

ஜெனிவா பேச்சுக்களின் போது துணை ஆயுதக் குழுக்கள் குறித்த தகவல்களை வெளியிட்டு அரசதரப் பின் வாயை பிளந்து போகச்செய்த விடுதலைப்புலிகள் - அடுத்த சுற்றுப்பேச்சுக்களில் துணை ஆயுதக்குழுக் கள் தொடர்பான ஆதாரங்களை மேலும் வெளியிட முயற்சிப்பர் என்பதில் சந்தேகமில்லை.

இந்தநிலையில், கண்காணிப்புக்குழுவை நம்ப வைப்பதில் அரசு தோல்வி கண்டு நிற்கிறது. ஆயுதக் குழுவினர் அரச கட்டுப்பாட்டு பகுதிகளில் இயங்குவது, அவர்களுக்கு படைத்தரப்பினரின் ஒத்துழைப்பு இருப் பது ஆகிய விடயங்களை மறுக்க முடியாது என ஹொக்லன்ட் தெரிவித்திருக்கிறார்.

ஹொக்லன்ட் தனது பணியில் இருந்து விலகிச் சென்றாலும், இந்த விடயம் தொடர்பாக கண்காணிப் புக்குழுவின் அவதானிப்புக்கள், கருத்துக்களில் மாற் றம் இருக்காது. இதனால் ஜெனிவா பேச்சுக்களில் இது முக்கியத்துவமானது.

அதேவேளை, ஆயுதக்குழுக்கள் விவகாரத்தை அரசு சமாதான சீர்குலைப்பு முயற்சிகளுக்குப் பயன் படுத்துகின்றது என்ற உண்மையை கண்காணிப்புக் குழுவும் ஜெனிவாப் பேச்சுக்களில் உரைக்கவேண்டும்.

சர்வதேசத்தின் முன்னிலையில் அரசின் கபடத்த னம் தோலுரிக்கப்படுவதற்கு இது பெரும் துணையாக இருக்கும். புலிக்கொடி ஏற்றுவதை போர்நிறுத்த மீற லாக குறிப்பிடும் அரசதரப்பு - இதனால் அமைதிக்கு எந்தப் பங்கமும் ஏற்படவில்லை என்பதை கருத்தில் கொள்ளவேண்டும்.

ஆனால், அரசின் பராமரிப்பில் உள்ள ஆயுதக் குழுக்கள்தான் இன்னொரு போருக்கான அடித்தளமாக இருப்பதையும், இதுவே மிகப் பெரிய போர்நிறுத்த மீறல் என்பதையும் சர்வதேசம் உணரும் காலம் வந்து கொண்டிருக்கிறது.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

நாடும் நடப்பும்




# பயங்கரவாதமும் பிரிவினை வாதமும் பாகிஸ்தான் அதிபருக்கு தெரியாதா?

## ஊர்சுற்றியார் பார்வையில்

பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்பதில் உறுதியாக நம்பிக்கையைத் தெரிவித்து வருகிறார் மகிந்த ராஜபக்ஷ. அண்மையில் பாகிஸ்தானுக்குச் சென்றிருந்த போதும் இந்த நம்பிக்கையைத் தெரிவிக்க அவர் மறந்து விடவில்லை. ஆனாலும் இந்தப் பிராந்தியத்தில் பயங்கரவாதம்,தீவிரவாதம், பிரிவினைவாதம் பற்றி பாகிஸ்தான் அதிபர் முஷாரப் குறிப்பிட்ட போது அதை மகிந்தரும் வரவேற்றிருக்கிறார். இதை நீர் கவனித்தீரா என்று சொல்லிக்கொண்டு வந்து அமர்ந்தார் நண்பர் பரதேசியார்.

இப்பொழுது எல்லா நாடுகளிலும் எல்லாத் தலைவர்களும் எடுத்த வுடன் பேசுவது பயங்கரவாதம், தீவிரவாதம் பற்றித்தான். இதிலென்ன ஆச்சரியம் என்று நான் கேட்டேன்.

ஆச்சரியம் தான். முஷாரப் எப்படி பாகிஸ்தான் அதிபராக வந்தார், எப்படி அந்தப் பதவியில் தொடர்ந்து இருந்து வருகிறார், பாகிஸ்தான் பிர தம மந்திரியாக இருந்த நவாஸ் ஷெரீப் எப்படி பதவியிலிருந்து அகற் றப்பட்டார், ஆட்சிபீடத்துக்கு வரத் தகுதியுடைய திருமதி பெனாசில் புட்டோ ஏன் வெளிநாடுகளிலேயே தங்கியிருக்க வேண்டியிருக்கிறது? இப்படி யான கேள்விகளுக்கெல்லாம் பாகிஸ்தானிலிருந்து பதில்பெற முடி யுமா? பயங்கரவாதம் பற்றியும் முஷாரப் பேசும்போது பாகிஸ்தான் ஆட்சி பீடத்தைக் கருத்தில் கொண்டு பேசுகிறாரா, இலங்கையைப் பற்றியும் சிந்தித்துப் பேசுகிறாரா? என்று கேட்டேன்.

முஷாரப் பேசும் போது, இலங்கை அதிபரைத் திருப்திப்படுத்துவதற்காகத்தான் அப்படி பேசியி ருப்பார். இதே சமயம் அவர் பேசும்போது தம்மை யும், தமது நாட்டைப்பற்றியும் சிந்திப்பதற்கு மறந்து விட்டார் என்று நினைக்கிறேன் என்றார் பரதேசியார்.

இலங்கையில் தீவிரவாதம், பயங்கரவாதம், பிரிவினைவாதம் பற் றிப் பேசுபவர்கள் 1950 களில் இலங்கை எப்படியிருந்ததென்பதைப்பற்றி சிந்திப்பதில்லை என்று நான் சொன்னேன்.

நீர் சொல்வது உண்மைதான். இங்குள்ள தலைவர்கள் பலருக்கே இலங்கையின் முன்னைய வரலாறும், இன்றைய வரலாறும் தெரி யாமலிருக்கும் போது, முந்தநாள் இராணுவத்திலிருந்து திடீரென்று ஆட்சி அதிகாரத்தைப் பிடித்த முஷாரப்புக்கு எப்படித் தெரியும்? இலங்கைக்கு வந்து திரும்பிச் சென்றபோதுதான் அவர் சென்ற விமானத்தைக் கீழி றக்காமல் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதைத் தமது விசு வாசிகளைக் கொண்டு முறியடித்து ஆட்சியையே கைப்பற்றினார். முஷாரப் என்று பரதேசியார் சொன்னார்.

இந்தியாவில் வெள்ளையர் ஆட்சிக்கு எதிராக நடந்த விடுதலைப் போராட்டம் இங்கும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய அறிகுறிகள் தென்பட்ட தால், இலங்கைக்கும் சுதந்திரம் வழங்க பிரிட்டிஷார் முன்வந்தனர். இதற் காக அரசியல் சீர்திருத்தம் கொண்டு வந்தனர். இந்த அரசியல் சீர்திருத் தம்பற்றி ஆராய்வதற்காக இங்கிலாந்திலிருந்து டொனமூர் கமிஷன், சோல்பரி கமிஷன் என்று கமிஷன்கள் வந்து விசாரணை செய்தன. இந்த கமிஷனில்தான் இலங்கையின் மக்கள் பிரதிநிதிகள் சபையில் சிங்களவர்போல் தமிழர்களுக்கும் சமபலப் பிரதிநிதித்துவம் வழங்க வேண்டுமென்று தமிழர் தலைவர் ஒருவர் வாதாடினார். இதற்காக அவர் இங்கிலாந்து சென்றிருந்த சமயம் முதல் பிரதமமந்திரி டி.எஸ். சேனநாயக்க கொடுத்த வாக்குறுதிகளை நம்பி இதர தமிழ்த் தலை வர்கள் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கும்படி விடுத்த கோரிக்கையில் கைச்சாத்திட்டனர். இலங்கையில் இன, மொழி, மதரீதியில் மக்க ளுக்கிடையில் எந்தவித பாகுபாடும் காட்டப்படமாட்டாதென்று டி.எஸ். சேனநாயக்க வாக்குறுதியளித்திருந்தார். 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் பெற்றபின் விவசாயத்தை விருத்திசெய்து உணவில் தன் னிறைவு காண்பதற்காக என்று கிழக்கில் குடியேற்றத்திட்டங்கள் தொடங்கப்பட்டன. இந்தப் பகுதிகளில் திட்டமிட்டு சிங்கள மக்கள் கொண்டுவந்து குடியேற்றப்பட்டனர். இந்தத் திட்டமிட்ட குடியேற்றமே இலங்கையின் இனப் பிரச்சினைக்கு அடிப்படைக் காரணமாயி ருக்கிறதென்பதை இன்னும் பலர் உணரவில்லை என்று சொன்னேன்.

1952 ஆம் ஆண்டில் முதல் பிரதமர் டி.எஸ்.சேனநாயக்க குதிரை யிலிருந்து விழுந்து மாண்டு போனார். இவருக்குப்பின் இவரது ஏற்பாட் டில் அவரது மகன் டட்லி சேனநாயக்க ஆட்சிபீடத்தில் அமர்ந்தார். டட்லி அரசின் முதல் வரவு செலவுத் திட்டத்தில் ஒரு கொத்து அரிசியின் விலை இருபத்தைந்து சதத்திலிருந்து எழுபத்தைந்து சதமாக நிதி அமைச்சர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன உயர்த்தினார். அரிசிவிலை உயர்வைப் பிடித்து எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டங்கள், வேலைநிறுத்தங்கள், கடைய டைப்புக்கள் என்று அரசுக்கு நெருக்கடி கொடுத்தன. டட்லி அரசியலி லிருந்து தற்காலிகமாக ஒதுங்க - சேர்.ஜோன் கொத்தலாவல பிரதம ரானார். இதுதான் ஆட்சியைப் பிடிக்கச் சந்தர்ப்பம் என்று பண்டார நாயக்க இருபத்தினான்கு மணி நேரத்தில் சிங்களத்தை அரசகரும மொழியாக்குவதாக வாக்குறுதியளித்து மக்களைத் தூண்டி விட்டார். மொழி வெறி நாட்டில் கரைபுரண்டோடியது. தேர்தலில் பண்டார நாயக்க பெரும்பான்மை பலத்துடன் ஆட்சிக்கு வந்தார். அவருடன் இனவெறிக் கட்சிகளும் கூட்டுச் சேர்ந்தன. சிங்களத்தை ஆட்சி மொழி யாக்குவதுடன் தமிழ் இனத்துவேஷமும் தூண்டிவிடப்பட்டது. சிங் களம் மட்டும் சட்டம். 1956 ஆம் ஆண்டு ஜுன் மாதம் ஐந்தாம் திகதி கொண்டுவரப்பட்டு அந்த மாதமே நிறைவேற்றப்பட்டது. இதை ஜன நாயக முறையிலும் காந்தீய வழியிலும் சாத்வீகமாகவும் தமிழர சுக் கட்சியின் தலைமையில் தமிழ் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதை சிங்கள இனவெறிக் கட்சியின் தூண்டுதலில் காடையர்கள் இனவி ரோத நடவடிக்கையாகத் திருப்பி தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடத்தி னர். இதுவே இலங்கையில் தமிழ் மக்களுக்கெதிராக நடந்த முதல் தாக்குதலாகும்.

இதைத் தொடர்ந்து 1958 ஆம் ஆண்டில் சிங்கள இனவாத அரசியல் கட்சிகளின் தூண்டுதலுடனும் பேரினவாதிகளின் செயலி னாலும் திட்டமிட்ட முறையில் இலங்கை முழுவதிலும் தமிழ் மக் களுக்கெதிராக இனக் கலகம் தூண்டிவிடப்பட்டது. தமிழர்கள் பலர் உயிரிழந்தனர். அவர்களின் உடமைகளும் சேதமாக்கப்பட்டன. பல் லாயிரக்கணக்கான தமிழர்கள் ஒரே நாளில் உறவுகளை இழந்து உரி மைகளை இழந்து அநாதைகளாக அகதி முகாம்களில் தஞ்சமடைந் தனர். வெளியூர்களிலும் அகதிகளான தமிழ் மக்கள் அனைவரும் கொழும்புக்கு கொண்டுவரப்பட்டுப் பின்னர் கப்பல்களில் தமிழ் மக்க ளின் தாயகமான வடக்கு- கிழக்குக்கு அனுப்பிவைக்கப்பட்டனர் என்று நான் சொன்னேன்.

இதன் பின்னர் தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளுக்காக ஜன நாயக முறையிலும் காந்தீய வழியில் சாத்வீக முறையிலும் தொடர்ந்து போராட்டம் நடத்தி வந்தனர். இப் போராட்டங்களை ஆட்சி பீடத் திலிருந்தவர்கள் தமது படைகளைக் கொண்டு அடக்கி ஒடுக்க நடவடிக்கை களும் எடுத்தனர். இதே சமயம் சிங்களக் காடையர்களும் தமிழ் மக்கள் மீது காடைத் தனத்தைக் கட்டவிழ்த்துவிட்டனர். தமிழ் மக்கள் இலங்கையில் பாதுகாப்பாகவும் உரிமையுடனும் வாழ்வதற்குச் சமஷ்டி ஆட்சி அமைப்பு வேண்டுமென்றுகோரி காந்தீய வழியில் சத்தியாகிரகப் போராட்டங்களை நடத்தி வந்தனர். இந்த சாத்வீகப் போராட்டங்கள் ஆட்சியாளர்களால் ஆயுதப்படைகளைக் கொண்டு அடக்கி ஒடுக்கப்பட்டன.

இந்த நிலையில் 1976 ஆம் ஆண்டில் தமிழ்த் தலைவர்கள் ஒன்று சேர்ந்து இனியும் தமிழ் மக்கள் அடக்கு முறைகளைத் தாங்கிக் கொண்டிருக்க முடியாதென்று தீர்மானித்து இழந்த தமிழ் அரசை மீண்டும் அமைப்போம் என்று தீர்மானம் நிறைவேற்றிப் பிரகடனம் செய்தனர். இந்தப் பிரகடனத்தின் அடிப்படையில் தமிழர் தாயகத்தில் தமிழர் கூட்டணி மக்களிடம் ஆணை கேட்டது. தாயக மக்கள் இழந்த தமிழ் அரசை மீண்டும் அமைக்க ஆணை வழங்கினர்.

இந்த ஆணையை நிறைவேற்றுவதற்குப் பதிலாக காவற்துறை யினர் தொடங்கி வைக்க நாடு முழுவதும் தமிழர்களுக்கெதிரான இனக் கலகம் தூண்டி விடப்பட்டது. மீண்டும் விசாரணைக்குழு பேச்சு வார்த்தை என்று காலம் கடந்தது . பின்னர் 1983 ஆம் ஆண்டில் தமிழ் மக்களுக் கெதிராக திட்டமிட்டு இனக்கலகம் நாடு முழுவதும் தூண்டி விடப்பட்டது. இந்தச் சமயத்தில் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தத் தயாராகி விட்டார்கள். அரச படைகளை தமிழ் இளைஞர்கள் எதிர்க்கத் தொடங்கினர். இன்று தமிழ் இளைஞர்கள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையில் தமது தாயகத்தில் பெரும்பகுதியில் தமது நிர்வாகத்தை, சுதந்திர தமிழீழத் தாயகத்தின் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டம் இன்று பெரும் பகுதியில் வெற்றியீட்டி சுதந்திர ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது முழுமையடைவதற்கு இன்னும் கொஞ்சம் தான் பாக்கியிருக்கிறது. பேரினவாதிகள் பெரும் முயற்சி செய்து கொண் டிருக்கிறார்கள். கருணா என்ற கோடரிக்காம்புபோல இன்னும் சில புல்லுருவிகளையும் பேரினவாதிகள் வளைத்துப் போட்டு வைத்திருக் கிறார்கள். இவர்களின் அனுசரணையுடன்தான் துணைப்படைகள் என்ற குழுக்களும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவற்றை வைத்து தமிழீழ விடுதலையைத் தடுத்துவிடலாமென பேரினவாதிகள் கனவு காண்கின்றனர்.

பாகிஸ்தான் ஜனாதிபதியும் பயங்கரவாதம், தீவிரவாதம், பிரிவினை வாதம் என்றெல்லாம் சொன்னவை சிங்கள ராஜதந்திரிகள் சொல்லிக் கொடுத்தவைதாம். ஆனால் ஈழத்தாயகத்தின் நிலைமை பாகிஸ்தான் தலைவர்களுக்குத் தெரியாது. இது மட்டுமல்ல. விடுதலைப் போராட்ட மென்பதே பாகிஸ்தான் அதிபர் முஷாரப் புக்குத் தெரியாது. பாகிஸ் தானிலிருந்து கிழக்குப் பாகிஸ்தான் ஏன் பிரிந்தது எப்படிப் பிரிந்தது என்பது கூட அதிபர் முஷாரப் நன்கு அறிந்து வைத்திருக்கிறாரோ தெரி யாது. இதை அவர் அறிந்திருந்தால் கூட பயங்கர வாதம் பற்றியும் பிரிவினை வாதம் பற்றியும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வந்திருக்கை யில் சொல்லியிருக்கமாட்டாரென்று பரதேசியார் சொல்லி நடந்தார்.

# கத்தோலிக்க கலைப்பாரம்பரியத்தில் திருப்பாடுகளின் காட்சி

ஒரு இனத்தின் பேணப்பட வேண்டிய பாரம்பரியங்களில் அந்த இனத்தின் கலைசார்ந்த முயற்சிகளும் குறிப்பிடத்தக்கதாகும். ஈழத் தமிழர்களின் மரபுக் கலைகளில் பல அழிக்கப்பட்டு விட்டது. இருக்கின்ற கலைகளைப் பேணுகின்ற முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது அனைவரினதும் கடமையாகும். அந்த வகையில் கத்தோலிக்க பாரம்பரியத்தில் திருப்பாடுகளின் காட்சி முக்கியத்துவம் வகிக்கின்றது.

1505 ஆம் ஆண்டில் போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தனர். போர்த்துக்கேயரின் வருகையானது - இலங்கையில் ஏற்படுத்திய தாக்கமானது பலவகைகளில் சாதகமாகவும், பாதகமாகவும் நோக்கத்தக்கது. சாதகமாக நோக்கும் போது - கத்தோலிக்க மதம் அறிமுகமாகியமையையும், அதனோடு தொடர்புடைய பல்வேறு விடயங்களையும் நோக்கலாம். குறிப்பாக கலை இலக்கியங்களை புதிதாக அறிமுகம் செய்த வகையிலும், இருந்தவற்றை புத்தாக்கம் செய்த வகையிலும் இந்தச் சாதக நிலை



போற்றப்பட வேண்டியதாகும்.

இங்கிருந்த கூத்து வடிவம், பள்ளு, குறவஞ்சி, அம்மானை போன்ற வடிவங்களை தமது மதபோதகப்பணிக்கு அவர்கள் பயன்படுத்திய போது, அவற்றை புத்தாக்கம் செய்து பயன்படுத்தினர். இவை எமது மரபுவழிக்கலைகளில் மாற்றத்தை உண்டுபண்ணின. அவ்வாறு மாற்றத்தை உண்டு பண்ணினாலும், எமக்குரிய தனித்துவத்தை கொண்டவையாக அவை புத்துருவாக்கம் பெற்றன எனலாம்.

இதைவிட புதிய நாடக மரபை ஈழத்தில் அறிமுகம் செய்தவகையிலும், நவீன நாடக மரபின் தொடக்கமாகவும் போர்த்துக்கேயர் இருந்தனர் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

இவ்வாறு அவர்கள் கொண்டு வந்ததாகக் கொள்ளப்படுகின்ற மறைஞான நாடகங்களின் தொடர்ச்சியாகவே Passion Play எனப்படுகின்ற திருப்பாடுகளின் நாடகமரபை கொள்ள வேண்டும். கிறிஸ்தவர்களின் தவக்காலப் பகுதியாகிய இந்தக் காலப்பகுதியில் இந்த நாடக மரபு பற்றிப் பார்த்தல் பொருத்தமானது.

மத்திய காலப்பகுதியில் ஐரோப்பாவில் தோற்றம் பெற்ற நாடகங்களில் மறைஞான நாடகங்கள், அற்புத நாடகங்கள், ஒழுக்கப்பண்பு நாடகங்கள் போன்றவற்றில் இருந்து தோற்றம் பெற்ற நாடக மரபே ஐரோப்பாவில் எலிசபெத்காலம், மறுமலர்ச்சிக் காலம் போன்றவற்றுக்கு அடித்தளமாக மாறியது. இந்நாடக மரபுகளை நன்றாக அறிந்த நிலையிலேயே போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தனர். இவர்கள் தம்முடன் கொண்டு வந்த நாடக மரபை இங்கு பயன்படுத்தியுள்ளனர்.

ஒரு பக்கம் அடைக்கப்பட்ட மேடை, காட்சித்திரைகள் பயன்படுத்தியமை, அரங்கில் மாயத்தன்மையான காட்சிகளை நிகழ்த்தியமை, உரைநடை சார்ந்த உரையாடல்களை அறிமுகம் செய்தமை போன்றதான பல செயற்பாடுகளை இவர்களே ஈழத்தில் அறிமுகம் செய்து வைத்தார்கள் எனலாம். ஒருவகையில் நவீனநாடக மரபை அறிமுகம் செய்து வைத்தவர்கள் இவர்கள் என்றே கூறலாம்.

திருப்பாடுகளின் நாடகமானது ஐரோப்பாவில் மறைஞான நாடகங்களில் இருந்தே தோன்றியது. இதன் தொன்மைத் தன்மையை அறிவதற்கு ஜேர்மனியிலுள்ள 'ஒபெரமா கௌ' என்ற கிராமத்தில் நிகழ்த்தப்படுகின்ற பாடுகளின் நாடகம் சான்று பகர்கின்றது. இங்கு பத்துவருடத்துக்கு ஒரு முறை பாடுகளின் நாடகம் நிகழ்த்தப்படுகின்றது. முழுக்கிராம மக்களுமே திரண்டு இந்த ஆற்றுகையை நிகழ்த்துகின்றனர். உலகின் பல நாடுகளில் இருந்து அதிக தொகையான பார்வையாளர் இந்த நிகழ்வை பார்ப்பதற்கு செல்வதை மரபாகக் கொண்டுள்ளனர்.

இலங்கையைப் பொறுத்தவரையில் ஆரம்பகாலத்தில் மனிதர்கள் நடிக்கின்ற நாடகமரபு இருந்திருக்கவில்லைப்போல் தெரிகின்றது. பொம்மைகளைக் கொண்டு நிகழ்த்துகின்ற உடக்குப்பாஸ் எனப்படுகின்ற பாரம்பரியமானது மிகப் பழைமையானதாகவுள்ளது. ஆளளவு உடக்குகளைக்கொண்டு மிகப் பெரிய அளவில் இதனை நிகழ்த்துவர். இந்த மரபானது எங்கிருந்து அறமுகமாகியது என்பது ஆய்வுக்குரியது.

### உடக்குப்பாஸ் மரபு

மன்னாரிலுள்ள பேசாலைக் கிராமம் உடக்குப்பாஸ் மரபில் தனித்துவமிக்கதாக விளங்குகின்றது. 1902 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட நிரந்தரமான பாஸ் மண்டபம் இன்றும் அங்குள்ளது. மூன்று அடுக்குத் தளங்களைக் கொண்ட இந்த மண்டபத்தில் பல்வேறு சுரங்கச் சுழிவுகள், நுட்பமான தொழில்நுட்ப வசதிகள் போன்ற பலவுமுள்ளன. பல நூற்றுக் கணக்கானோரினது பங்களிப்புடனேயே இந்தக் காட்சிகளை நிகழ்த்த முடியும். முழுக்கிராமமுமே இணைந்து இந்தக் காட்சியை நிகழ்த்தும். வியாகுல பிரசங்கம் (பசாம்) இந்தக் காட்சிகளுக்கான பின்னணியாக அமைந்திருக்கும்.

பொம்மைகள் இயங்கும் தன்மையுடனும், கண்சிமிட்டும் தன்மையுடனும் காணப்படும். ஒரு பொம்மையை இயக்குவதற்கே மூவர் பயன்படுவர். அதற்குள் காட்சிகளை மாற்றுதல், மாயத்தன்மையான காட்சிகளை நிகழ்த்துதல் போன்ற பல்வேறு விடயங்கள் நிகழ்த்தப்படுவதாய் இருக்கும். இவற்றை நிகழ்த்துவதற்கே நிபுணத்துவம் வாய்ந்த பரம்பரை அடிப்படையிலான குழு ஒன்று தொழிற்படும். அந்தக் குழுவுடன் இணைந்து அவர்களுக்கு உதவத் தக்க வகையில் உப குழுக்கள் செயற்படும். ஆற்றுகைக்கு இரு மாதத்துக்கு முன்னமே இதற்கான ஆயத்த நடவடிக்கைகள் ஆரம்பமாகி விடும். முழுக் கிராமமுமே இணைந்து அந்த ஆற்றுகையில் மகிழ்வடையும். இந்த உடக்குப்பாஸானது இங்கு சமூகவியல் முக்கியத்துவமுடையது. குறிப்பிட்ட சமூகத்தினர்கள் ஒன்று திரண்டு நிகழ்த்துகின்ற ஒருமைப்பாட்டை இந்த ஆற்றுகையின் இயல்பு கொண்டுள்ளது. குறிப்பாக ஒவ்வொரு குறிச்சியினரும் இந்த ஆற்றுகையின் ஒவ்வொரு பகுதியையும் பிரித்து தமக்குரிய தனித்துவத்துடன் நிகழ்த்துகின்றனர். முழுச்சமூகமும் ஒன்று திரளாவிடில் இந்த ஆற்றுகை நிகழமாட்டாது.

இவ்வாறான தொன்மைக்குரிய பாரம்பரியமானது - இன்று பல இடங்களில் வழக்கொழிந்து விட்டது. பேசாலைக் கிராமத்தில் மட்டும் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் நிகழ்த்தப்படுகின்றது. ஆனால் இளவாலை, பருத்தித்துறை, ஊர்காவற்துறை, குருநகர், கிளாலி போன்ற இடங்களில் மட்டும் பெரிய வெள்ளிக்கிழமைகளில் இயேசு சிலுவையில் இறக்கும் காட்சி மட்டும் நிகழ்த்தப்படுகின்றது.

### மனிதர்கள் நடிக்கின்ற பாடுகளின் நாடகம்

மனிதர்கள் நடிக்கின்ற பாடுகளின் நாடகம் சிங்கள மக்கள் மத்தியில் ஏற்கனவே அறிமுகமானாலும், 1952 ஆம் ஆண்டு முதன் முதலாக யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் மேடையேற்றப்பட்டது. அருட்திரு லோங் அடிகள் - ஜேர்மனியில் இருந்து கொண்டு வந்த ஆங்கில நாடகப் பிரதியே இங்கு நிகழ்த்தப்பட்டது. தொடர்ந்து அருட்தந்தை மரியாம்பிள்ளை அடிகள் அதனை மொழி பெயர்த்து 1954 ஆம் ஆண்டு தமிழில் மேடையேற்றினார். அதனைத் தொடர்ந்து அந்தப் பிரதியை பலரும் மேடையேற்றினார்கள்.

மனிதர்கள் நடிக்கிற இந்த நாடக மரபு - மத்திய காலத்தில் பயன்படுத்தப்பட்டது போன்ற நீண்ட செவ்வக மேடையில் பெருங்காட்சிகளுடன் நிகழ்த்தப்படுகின்றது. இதில் ஈடுபடுகின்றவர்கள் இது ஒரு சடங்கு என்ற மனநிலையுடனேயே இதில் ஈடுபட்டனர். தம்மை தூயநிலையில் வைத்துக்கொண்டு தவமுயற்சிகளிலொன்றாக இதனை நினைத்து இதில் ஈடுபடுவர். இந்தப் பாடுகளின் நாடக முயற்சியில் ஈடுபடுவதற்கூடாக பாஸ்கா கால தியானத்தை நிறைவேற்றுவதாக எண்ணி ஈடுபடும் மனநிலையுடனேயே இன்றும் ஈடுபட்டுவருகின்றனர்.

திருப்பாடுகளின் நாடக மரபை தனித்துவமானதாகக் கொண்டு கடந்த நாற்பது வருடங்களாக நிகழ்த்தி வருபவர்கள் திருமறைக் மன்றத்தினர். ஈழத்துக்கென தனித்துவமான ஒரு பாரம்பரியத்தை ஏற்படுத்தியவர்கள் என்ற வகையிலும், தொடர்ச்சியாக அதை மேடையேற்றி வருகின்ற வகையிலும் அருட்கலாநிதி மரியசேவியர் அடிகளும், திருமறைக் கலாமன்றத்தினரும் வரலாற்றில் பதியப்படவேண்டியவர்கள். இந்த வருடமும் இவர்களால் 'பலிக்களம்' எனும் பாடுகளின் நாடகம் மேடையேற்றப்படுகின்றது.

### திருமறைக் கலாமன்றத்தின் முயற்சிகள்

மனிதர்கள் நடிக்கின்ற பாஸ்க் நாடக மரபு பல இடங்களிலும் பரவலாக மேடையேற்றப்பட்டது. ஆனால் தமிழுக்குரிய தனித்துவத்துடன் இதனை வளர்த்தெடுத்தவர்கள் திருமறைக் கலாமன்றத்தினரே எனலாம். அருட்திரு மரியசேவியர் அடிகள் இந்தப் பணியின் பிதாமகர் எனலாம்.

1961 ஆம் ஆண்டில் இருந்து அவர் இந்தப் பணியிலீடுபட்டு வருகின்றார். மன்னாரில் முதன் முதலாக மனிதர்கள் நடிக்கின்ற திருப்பாடுகளின் காட்சியை இவரே நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து திருமறைக் கலாமன்றத்தை உருவாக்கி, அதற்கூடாக பல இடங்களிலும் பல வருட காலமாக நிகழ்த்திவருகின்றார். இந்தச் செயற்பாடு இலங்கையில் மட்டுமன்றி, இன்று வெளிநாடுகளிலும் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. ஐரோப்பாவில் இருந்து இங்கு வந்த மரபு இங்கு தமிழ்நிலைப்படுத்தப்பட்டு மீண்டும் ஐரோப்பாவுக்கே கொண்டு செல்லப்படுகின்றமை ஒரு வரலாற்றுத் திருப்பமாகும்.

திருப்பாடுகளின் காட்சியை சடங்கிலிருந்து நாடகம் வரை வளர்த்துச் சென்ற வரலாறு திருமறைக் கலாமன்றத்துக்குரியது. மன்னார், உரும்பிராய் , நாரந்தனை, குருநகர், அச்சுவேலி, காங்கேசன்துறை... ஆகிய கிராமங்கள் தோறும் நிகழ்த்தப்பட்ட இந்த நாடக மரபில் பலபரீட்சார்த்தமான முயற்சிகளின் மூலமும், படிப்படியான செயற்பாடுகள் மூலமும் செழுமைமிக்க நாடக பாரம்பரியமாக ஆக்கி தனித்துவமான அளிக்கையாக திருமறைக் கலாமன்றம் உருவாக்கியமையை அரங்கியலாளர்கள் அறிவர்.

இந்தச் செயற்பாடுகளுக்கூடாக வெறும் சடங்கு நிலைப்பட்ட பாடுகளின் காட்சி அந்த நிலையில் இருந்து அழகியல் பண்புமிக்க ஆற்றுகை வடிவமாகவும், சிந்தனையைத் தூண்டும் காத்திரம்மிக்க நாடக வடிவமாகவும் மேற்கிளம்பியது. அதன் வளர்ச்சி சார் பரிமாணத்தை பின்வருமாறு நோக்கலாம்.

✳பாரம்பரிய தன்மைமிக்க நாடகப்பிரதியில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. அதாவது மொழி பெயர்ப்புக்களில் தங்கியிராது தமிழுக்குரிய தனித்துவமிக்க புதிய எழுத்துப் பிரதிகள் ஆக்கப்பட்டது.

✳அந்தக் காலத்தில் வழக்கில் இருந்த எதுகை, மோனைத் தன்மையான மொழிநடை பயன்படுத்தப்பட்டது.

✳காட்சி விதானிப்புகளில் அதிக கவர்ச்சியும், அழகியலும் மிக்கதான பெருங்காட்சியும், கவர்ச்சிகரமான அழகியல் மொழித்தன்மையும் பயன்படுத்தப்பட்டது.

✳ வேட உடைகளில் யதார்த்தத்தையும், கவர்ச்சித்தன்மையையும் கொண்டதான தன்மைகள் பேணப்பட்டது. அதற்கென தனித்துவமான மரபு உருவாக்கப்பட்டது.

✳சடங்குக்கு அப்பால் சிறப்பான நடிப்பு முறைபேணப்பட்டதுடன், தர்க்க நிலை கதைப்பின்னலுடன் நாடக அமைப்பு உருவாக்கப்பட்டது.

✳விவிலியத்தில் வெவ்வேறு கதைக்கருக்களை தெரிந்து, புதிய கதைப்பின்னல்களை அமைக்கின்ற பாரம்பரியமொன்றை ஆரம்பித்தமை.

✳பாரம்பரிய தமிழ் சிற்றிலக்கிய வடிவங்களாகிய உலா, பரணி, கலம்பகம் போன்ற இலக்கிய வடிவங்களைப் பயன்படுத்தி அதற்குள் கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு என்பவற்றை உட்புகுத்தி மேடையேற்றியமை.

✳பல பிரதேச கலைஞர்களை ஒன்றிணைத்து இதனை தொடர்ந்து நிகழத்தக்க கலைத்துவ குழுமமொன்றை உருவாக்கியமை.


✳இவ்வாறு உருவாக்கிய பாடுகளின் நாடக மரபை இலங்கை முழுவதிலும் மேடையேற்றியதோடு மட்டுமன்றி, பிற நாடுகளிலும் மேடையேற்றி வருகின்றமை.

✳ திருப்பாடுகளின் நாடகத்துக்குள் சமகால பிரச்சினைகளை உட்புகுத்தி, காலத்துக்கு காலம் சமூகப் பிரச்சினைகளையும் பேசியமை.

போன்ற பல்வேறு செயற்பாடுகளுக்கூடாக திருப்பாடுகளின் நாடகத்தை தனித்துவம் மிக்க ஒன்றாக்கி, அந்தப்பாரம்பரியத்தைத் தொடர்ந்து பேணிவரும் வகையில் திருமறைக் கலா மன்றம் ஈழத்து வரலாற்றில் தனித்துவமான ஒரு இடத்தைப் பெறுகின்றது என்றால் அது மிகையல்ல. இந்த வருடமும் யாழ்ப்பாணம், கொழும்பு போன்ற இடங்களிலும் பிரான்ஸ், கனடா போன்ற நாடுகளிலும் மேடையேற்றுவதும் இந்தப் பணியின் தொடர்ச்சிக்குச் சான்றாக அமைகின்றது.

இந்த நாடக மரபை சடங்காக மட்டுமே நோக்கி, நாடக வரலாற்றில் பேசாத தவறை எமது நாடக வரலாறுகள் கொண்டுள்ளன. ஆனால் திருப்பாடுகளின் நாடக மரபை, அதன் அழகியல் , அளிக்கை, பக்தி, சமூகவியல், அரங்கியல் என்று பல்வேறு தளங்களில் நோக்குவதற்கு ஆய்வாளர்கள் முன்வருதல் வேண்டும்.

**யோவான்**



# அகவை அறுபது காணும்
## பேராசிரியர் சிவலிங்கராஜா



நம்பவே முடியாதிருக்கிறது. பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜாவுக்கு அகவை அறுபது என்பது நம்பமுடியாத நிகழ்வாகத் தான் இருக்கின்றது. இன்னமும் உள்ளத்திலும், தோற்றத்திலும் இளமையாகக் காணப்படும் சிவலிங்கராஜாவின் நகைச்சுவையுடன் கூடிய, அர்த்தமுள்ள வார்த்தையாடல்கள் அவர் ஆறாவது தசாப்தத்தில் காலடி எடுத்து வைக்கிறார் என்பதை நம்பமறுக்கிறது. எனினும் அவரது ஆளுமைதரும் வயதுக்கும், அனுபவத்துக்கும் ஈழத்தமிழிலக்கியத்துக்கு இன்னமும் வலுச் சேர்க்கும் படைப்புக்களைத் தரும் தகுதியை அடைந்து விட்டார் என்பது மகிழ்வையும் தருகின்றது.

பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர். இந்த உன்னத பதவியை அடைவதற்கு அவரது தமிழ் அறிவும், தமிழிலக்கிய ஆற்றலும் தான் காரணங்களாகும். அவரால் அந்தப் பதவி பெருமையுறுகின்றது. அவரை உருவாக்கிய ஆசான்கள் சாதாரணமானவர்களல்லர்.

பண்டிதர் க.வீரகத்தி, பேராசிரியர் சு.வித்தியானந்தன், பேராசிரியர் க.கைலாசபதி, பேராசிரியர் கா.சிவத்தம்பி, பேராசிரியர் அ.சண்முகதாஸ் முதலியோரை ஆசான்களாக அடைந்தவர். ஒரு பேராசிரியரிடம் கற்றாலே தமிழின் அனைத்துத் துறைகளிலும் விற்பன்னராகிவிடலாம். பண்டிதர் வீரகத்தி, பேராசிரியர் அ.சண்முகதாஸ் என்போரின் இலக்கணத்தெளிவும், இலக் கிய ஆளுமையும் சிவலிங்கராஜாவிடம் செங்கோல் ஓச்சுகின்றன.

பேராசிரியர் சு.வித்தியானந்தனின் பண்பாட்டியல் கோலங்களும், நாட்டாரியல் வரன்முறைகளும் சிவலிங்கராஜாவிடம் தாமாகவே சேர்ந்து விட்டன. பேராசிரியர் க.கைலாசபதியின் மொழியியல் ஆய்வும், பேராசிரியர் கா.சிவத்தம்பியின் ஆய்வியல் நுட்பங்களும் ஒருங்கே சிவலிங்கராஜாவிடம் புகுந்துவிட்டன. மொத்தத்தில் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா தமிழில் பல்துறை ஆற்றல்களையும் தெரிந்து, சரிவரப் பிரயோகிக்கத் தெரிந்த தமிழ் அறிஞராக எனக்குப் படுகின்றது.

பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜாவின் ஆற்றலை வெளிப்படுத்துவனவாக அவர் ஆக்கிய நூல்கள் விளங்குகின்றன. வடமராட்சியின் கல்விப்பாரம்பரியமும், இலக்கிய வளமும், சி.வை. தாமோதரம் பிள்ளை - வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம், வித்துவசிரோன்மணி கணேசையரின் வாழ்க்கையும் பணியும், ஈழத்து இலக்கியச் செல்நெறி , ஈழத்துத் தமிழ் உரை மரபு, யாழ்ப்பாணத்து வாழ்வியற் கோலங்கள் என்பன அவரது ஆய்வு நூல்களாகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத் தமிழ் கல்வி எனும் ஆய்வு நூல் சரஸ்வதி சிவலிங்கராஜாவுடன் இணைந்து எழுதிய நூலாகும். ஈழத்தின் முன்னோடி நாவல்களில ஒன்றாகிய மங்களநாயகம் தம்பையாவின் நொருங்குண்ட இருதயம், அகநானூறுக்காக வித்துவசிரோன்மணி கணேசையர் எழுதிய உரை எனும் நூல்களுக்குப் பதிப்பாசிரியராக விளங்குகிறார். அனைத்துலகத் தமிழ் ஆய்வுகள் பலவற்றில் பங்குபற்றியுள்ளார். ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பித்துள்ளார்.

பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா தான் சொல்லவிரும்பும் கருத்தைத் தெளிவாகவும், எவரும் புரியக் கூடியபாங்கிலும் எழுதவும், மேடைகளில் பேசவும் வல்லவர். அவருடைய சொற்பெருக்குகளைக் கேட்பது ஓர் இனிய அனுபவமாக எனக்குப்படும்.

யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய பண்பாட்டுக்கோலங்களையும், வாழ்வியலையும் மிகத்தெளிவாகப் புரிந்துவைத்திருக்கும் அவர் இந்தத் துறையில் முழுமையான ஓர் ஆய்வு நூலை வெளியிடவேண்டும். பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா ஒரு நல்ல கவிஞர் என்பதும், சிறுகதை ஆசிரியர் என்பதும் பலருக்குத் தெரியாத உண்மை.

அகவை அறுபதைக் காணும் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜாவை வாழ்த்தி மகிழ்கின்றோம்.

**கலாநிதி. க.குணராசா (செங்கை ஆழியான்)**

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடகிழக்கில் உதைபந்தாட்டத்தை வளர்க்க வேண்டும்

## விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பிளாட்டரிடம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்—

எங்கள் இளைய தலைமுறை சிறப்பான ஒரு வாழ்வைப் பெறவேண்டும். ஒவ்வொரு இளைஞனும் வீரமும், விவேகமுமான தலைமுறையாக உருவாக வேண்டும். இதுவே எங்கள் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் எதிர்பார்ப்பாகும்.

அவர் உதைபந்தாட்டத்தின் மீது பெரும் ஈடுபாடுடையவர். எங்கள் போராட்டத்தின் அடித்தளமே எதிர்காலத் தலைமுறையின் மகிழ்ச்சியான வாழ்வும், எமது மக்களின் கௌரவத்துடன் கூடிய அமைதியான இருப்பும் நோக்கிய பயணமாகிறது என தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் ஜோசப் பிளாட்டருக்கு அனுப்பி வைத்த வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவர் ஜோசப் பிளாட்டர் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதைபந்தாட்டப் பயிற்சி நிலையங்களை அமைப்பதற்கான செயற்திட்டத்தைக் கையளிப்பதற்கான நிகழ்வுக்காக இலங்கை வந்திருந்தார்.

அவருடன் ஆசிய உதைபந்தாட்டச் சம்மேளனத் தலைவர் முகமட்அன் கமாமும் இந்த நிகழ்வுக்கு வந்திருந்தார். சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் நிதியுதவியுடன் நடைபெறும் உதைபந்தாட்டப் பயிற்சி நிலையங்கள் அமைப்பதற்கான இந்தச் செயற்திட்டத்தில், வடக்கு- கிழக்கு தமிழர் தாயகத்தில் எட்டு உதைபந்தாட்ட லீக்குகளும், இலங்கையிலிருந்து ஒன்பது லீக்குகளும் தெரிவுசெய்யப்பட்டன.

வடக்கு - கிழக்கில் எட்டு உதைபந்தாட்ட பயிற்சி நிலையங்களும், வடக்கு - கிழக்கு இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தின் ஊடாக அமைக்கப்படவுள்ளன. களுத்துறையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - தமிழீழ விளையாட்டுத் துறையின் சிறப்புப் பிரதிநிதியாக கலாநிதி நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் கலந்து கொண்டு தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பாவின் சிறப்புச் செய்தியை வாசித்து ஜோசப் பிளாட்டரிடம் கையளித்தார்.

அத்தோடு, விடுதலைப் புலிகளின் சார்பில் நினைவுப் பரிசு ஒன்றையும் சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவர் - ஜோசப் பிளாட்டருக்கு வழங்கினார்.

அந்தச் சிறப்புச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலான யுத்தத்தால் எமது மக்கள் நிறைய துயரத்தை அனுபவித்துள்ளார்கள். அந்தக் காலங்களில் உதைபந்தாட்டமும் அவர்களின் மன அழுத்தத்தை மாற்றும் மருந்தாக அமைந்திருந்தது. மக்கள் மீதான தொடர்ச்சியான குண்டு வீச்சு, எறிகணைத் தாக்குதல்களாலும் உதைபந்தாட்டத்தில் ஈடுபடுவதன் மூலம் கிடைக்கும் மகிழ்ச்சியைத் தடுக்க முடியவில்லை.

பூட்ஸ் இன்றி வெறும் கால்களுடன் வசதிகள் எதுவுமின்றியும் உதைபந்தாட்டம் எமது மண்ணில் தொடர்ந்து 2002 பெப்ரவரி கைச்சாத்தான யுத்தநிறுத்த ஒப்பந்தம் வரை 10 ஆண்டுகளுக்கு மேலாகக் கடுமையான பொருளாதாரத்தடை எம் மக்கள் மீது சுமத்தப்பட்டிருந்தது. விளையாட்டு உபகரணங்களும் இதற்கு விதிவிலக்காகவில்லை.

மணிலாலின் முயற்சியால் இப்போது வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு 8 உதைபந்தாட்டப் பயிற்சி நிலையங்கள், சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் நிதியுதவியுடன் கிடைக்கிறது. இதற்காக உங்களுக்கு எங்கள் மக்கள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது வடக்கு - கிழக்கு உதைபந்தாட்ட அபிவிருத்திச் சங்கம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தில் உதைபந்தாட்டத்தை வளர்த்தெடுக்க உதவும்படி வேண்டுகிறேன். உதைபந்தாட்டம் எப்போதுமே இனவாதத்துக்கும், ஒடுக்குமுறைக்கும் எதிராகப் போராடுவதை தனது கோட்பாடாகக் கொண்டுள்ளது என்பதை அறிவோம்.

இவ்வாறு களுத்துறை நிகழ்வில் சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத் தலைவர் ஜோசப் பிளாட்டருக்கு தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா அனுப்பி வைத்துள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## நேர்ப் பயிற்றுநரை பயிற்றுவிக்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்—

வடக்கு - கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டத்தின் வள ஆளணியினருக்கான பயிற்றுநரைப் பயிற்றுவிக்கும் பயிற்சித் திட்ட நிகழ்ச்சி எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணியிலிருந்து பிற்பகல் 4.30 மணிவரை நடைபெறவுள்ளதாக திட்டத்தின் பிரதித் திட்டப் பணிப்பாளர் வே.சாம்பசிவம் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட திட்ட முகாமைத்துவ அலகின் தகவல், கல்வி தொடர்பாடல் ஆலோசகர், உதவி ஆலோசகர், சமூக சேவை உத்தியோகத்தர் ஆகியோரும் பிரதேச செயலகங்களில் இந்தத் திட்டத்தின் பிரதேச மட்ட இணைப்பாளர்களாகப் பணிபுரிபவர்களும், இந்தத் திட்டத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களும் ஒவ்வொரு பிரதேச செயலகத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பொருத்தமான ஒவ்வொரு கிராமியப் புனரமைப்புக் குழுவின் சார்பில் தலா ஒவ்வொரு பிரதிநிதியும் இந்தப் பயிற் சித் திட்டத்தில் பங்குபற்ற அழைக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு - கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டத்தின் மாதிரித் திட்டம் தரும் பாடமும், அனுபவமும் என்பது தொடர்பாக பிரதித் திட்டப் பணிப்பாளரும், தகவல் தொடர்பாடலின் முக்கியத்துவம் பற்றி தகவல் தொடர்பாடல் நிபுணரும், கிராமிய மட்ட தொடர்பாடல் யுக்திகள் தொடர்பாக இந்தத் திட்டத்தின் தலைமையலுவலகத்தின் தகவல், கல்வி, தொடர்பாடல் ஆலோசகரும், சமூக அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக இந்தத் திட்டத்தின் சமூக அபிவிருத்தி நிபுணரும், இந்தத் திட்டம் தொடர்பான சூழலியல் விடயங்கள் பற்றி சூழலியல் நிபுணரும், தொழில்நுட்பம்சார் விழிப்புணர்வு செயற்பாடுகள் தொடர்பாக பொறியியல் நிபுணரும் கருத்துரைகளையும், பயிற்சிச் செயற்பாடுகளையும் ஆற்றவுள்ளனர்.



யாழ். இந்துக் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற தீம் தீம் இறுவட்டு வெளியீட்டு விழாவின் காட்சிகள்.

## மோட்டார் சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் படுகாயம்!

யாழ்ப்பாணம்—

மோட்டார் சைக்கிள் நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளான சம்பவத்தில் ஒருவர் காயமடைந்து யாழ். போதனாவைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை கனகபுரம் கிளிநொச்சியைச் சேர்ந்த ஆ.முருகானந்தம் (வயது 29) என்பவரே காயமடைந்தவராவார்.

கனகபுரம் கிளிநொச்சியில் இந்த மோட்டார் சைக்கிளில் ஏ-9 வீதி வழியாக வந்துகொண்டிருந்த போது - அதே வீதியால் வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிள்களும் மோதிக் கொண்ட சம்பவத்தில் மேற்படி நபர் காயமடைந்தார்.

காயமடைந்தவர் கிளிநொச்சி வைத்தியசாலையிலிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.


## ஓராண்டு நினைவஞ்சலி

ஜனனம்
27
03
1946



அஸ்தமனம்
06
04
2005

திதி 26.03.2006

### அமரர் சின்னப்பு பொன்னுத்துரை

(பொன்மலர் ஸ்ரோர், அளவை இனிப்பு தொழில் (Sun Brand) உரிமையாளர்)

ஆண்டாண்டு போனாலும் அப்பா யார் மறப்பார் உங்களை
இலக்கணம் மாறிடாத இனிய மனிதராய்
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
உறவுகளுக்கெல்லாம் சிகரமென இருந்து சீரான வழிகாட்டி
நகரும் இவ்வுலகில் நம் நலம் கண்டு
மனமகிழ்ந்து திளைக்கும் முன்பே - பொல்லாத
காலனவன் பறித்தெடுத்தான் உங்கள் உயிரை
உங்கள் ஆத்மா சாந்தி பெற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள், சகோதர சகோதரிகள்
மைத்துனன் மைத்துனிகள், மருமக்கள்

(2235)


## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி தம்பிப்பிள்ளை
(சங்கானை)

மாவடி - ஆலய வீதி, சங்கானையை வசிப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி தம்பிப்பிள்ளை 05-04-2006 (நேற்று) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர் தெய்வானையின் அன்புக் கணவரும், சிவசுப்பிரமணியம் (லீலா பேக்ஹவுஸ், சங்கானை), கோவிந்தராசா (லீலா), தனலக்சுமி, மனோகராதேவி, அருந்தவச்செல்வி, பாலசுப்பிரமணியம் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மனோன்மணி, தனலட்சுமி, பரமானந்தம் (காசிப்பிள்ளை ஸ்ரோர்ஸ், சங்கானை), இராஜகுலேந்திரம், கணேஸ்வரன் (அருள் ஆனந்த பிடவை நிலையம், சங்கானை), கலைவாணி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம், இராமலிங்கம், அன்னம்மா மற்றும் சதாசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி மைதிலி ஹரிகரன் (ஆசிரியை, பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.), சுரேந்திரன் (லீலா பேக் ஹவுஸ், சங்கானை), நக்கீரன் (வீரகேசரி, கொழும்பு), தமிழினி (திட்டமிடல் நிதி உதவியாளர், மகளிர் கல்லூரி, பண்டத்தரிப்பு), தமிழ்ச்செல்வன், தமிழரசி (சங்கானை சிவப்பிரகாச ம.வி.), திருமதி நிசந்தி சுரேஷ் (கனடா), நிரஞ்சன் (கொழும்பு), நிரஞ்சினி, நகிதா (ஆசிரியை, மத்திய கல்லூரி, மல்லாவி), றஜீவன் (சரணியா, சங்கானை), சரிதா (இராமநாதன் நுண்கலைப்பீடம், மருதனார்மடம்), அனிதா (சங்கானை சிவப்பிரகாச ம.வி.), சுவித்தா, சியாமினி (தேசிய கல்வியியற்கல்லூரி, கோப்பாய்), சாலினி, சந்தோஷ் (கனடா), வைஷ்ணவி (கனடா) ஆகியோரின் பேரனும், ஆகாஷ், ஆர்த்தி, பிரவின், அபிலாஷ் ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06-04-2006) வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக சங்கானை கரைச்சி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
**த.சிவசுப்பிரமணியம் (மகன்)**
*(லீலா பேக்ஹவுஸ், சங்கானை)*

*மாவடி ஆலயவீதி,*
*சங்கானை.*

(48)

நமது ஈழநாடு

The Namathu Eezhanadu

The Leading Daily of Tamils' Homeland

# முப்படையினர், பொலிஸாருடன் ஜனாதிபதி மகிந்த சந்திப்பு!

கொழும்பு—

அரசியல் தலைவர்கள் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட்டிருந்தாலும் படையினர் நாட்டைக் காப்பதற்காக உறுதியான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்க வேண்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மாலை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பெருமளவிலான படை அதிகாரிகளை சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற பின்னர் படையினரில் பெருமளவானோரை சந்தித்து கலந்துரையாடிய முதல் நிகழ்வாக இது அமைந்தது.

இந்தச் சந்திப்பில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, கூட்டுப் படைகளின் தளபதி அட்மிரல் தயா சந்தகிரி, இராணுவத்தளபதி லெப். ஜெனரல் சரத்பொன்சேகா, கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் வசந்த கரன்னகொட, விமானப் படைத் தளபதி எயார்மார்ஷல் டொனால்ட் பெரேரா, பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ மற்றும் நூற்றுக் கணக்கான படை அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவும் தனது ஓய்வுக்காலத்தில் படை அதிகாரிகளை சந்தித்தது குறிப்பிடத்தக்கது.

## பிந்திய செய்தி

# கருணாகுழு மீது தாக்குதல்!

மட்டக்களப்பு—

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பனிச்சங்கேணிப் பகுதிக்குள் ஊடுருவிய கருணா குழுவினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இருவர் படுகாயமடைந்தனர்.

நேற்று மாலை 5.30 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

மோட்டார்கள், இயந்திரத் துப்பாக்கிகள் சகிதம் ஊடுருவிய இந்தக் குழுவினரை விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தாக்கியபோது கருணா குழு முக்கியஸ்தரான சூட்டி உட்பட இருவர் படுகாயமடைந்தனர்.

வயிற்றில் படுகாயமுற்ற சூட்டியை அந்தவழியே வந்த சிவிலியன் ஒருவரின் மோட்டார் சைக்கிளைப் பறித்து அதில் ஏற்றிக்கொண்டு கிரிமிச்சை இராணுவ முகாமுக்குக் கொண்டுசென்றதாகத் தெரியவருகிறது. பின்னர் அந்த மோட்டார் சைக்கிள் இராணுவ முகாமருகே கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டது.

## உயர்தொழில்நுட்ப நிறுவன

# சொத்து சேதம் குறித்து மதிப்பிட கோப்பாய் பொலிஸாருக்கு பணிப்பு

யாழ்ப்பாணம்—

அண்மையில் யாழ். உயர் தொழில்நுட்ப கல்லூரியில் அன்னை பூபதி நிகழ்வின்போது படையினரால் அங்கு சொத்துக்கள் சேதமாக்கப்பட்டமை தொடர்பாக தமக்கு அறிக்கை சமர்ப்பிக்கும்படி மனிதகள் உரிமை ஆணைக்குழு கோப்பாய் பொலிஸாரை பணித்துள்ளது.

அண்மையில் யாழ்.உயர்தொழில்நுட்ப கல்லூரியில் அன்னை பூபதி நினைவுதினம் அனுஷ்டிக்கப்பட்டபோது - படையினரின் அத்துமீறிய செயற்பாட்டால் மாணவர்கள் சிலர் தாக்குதலுக்குள்ளாகியதுடன், அங்குள்ள தொலைபேசி உள்ளிட்ட சொத்துக்களும் சேதமாக்கப்பட்டன.

இது தொடர்பாக மாணவர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இதனையடுத்தே சேதவிபரம் தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாரை ஆணைக்குழு பணித்துள்ளது. (ரி)

# வீரவன்ச குற்றச்சாட்டு...

போர்நிறுத்த ஒப்பந்தத் தில் பாரிய திருத்தங்களை மேற்கொள்ள முனைய வேண்டும். முதல்சுற்றுப் பேச்சில் அரசாங்கக் குழுவினர் கடைப்பிடித்த மென்மைப் போக்கை சகித்துக் கொண்டோம்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தால் நாட்டின் பாதுகாப்பை விலையாகக் கொடுத்து மற்றொரு தரப்பு மட்டுமே பயனடையக்கூடிய நிலை இருக்கிறது.

இந்தநிலையை மாற்றும் வகையில் போர்நிறுத்த ஒப்பந்தத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படவேண்டும். இதை இரண்டாம் சுற்றுப் பேச்சுக்களில் அரசாங்கக்குழு வலியுறுத்தியாக வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக மகிந்தவுடன் ஜே.வி.பி செய்துகொண்ட ஒப்பந்தத்தில் - நோர்வேயை வெளியேற்றவேண்டும், போர்நிறுத்த ஒப்பந்தம் திருத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருகிறது. அந்த ஒப்பந்தத்தைச் செயற்படுத்துமாறு மகிந்த ராஜபக்ஷவை இப்போது நாம் வலியுறுத்துவோம்.

விடுதலைப் புலிகளுக்குப் பக்கச் சார்பான நிலையைத்தான் நோர்வே தொடர்ந்து கடைப்பிடித்துவருகிறது. போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவராக இருந்த ஹக்ரப் ஹொக்லன்ட் அண்மையில் - விடுதலைப் புலிகளை விடுதலைப் போராட்ட வீரர்கள் என்று புகழ்ந்துள்ளார்.

இத்தகைய நிலைப்பாடுகளால் தான் நோர்வேயை வெளியேற்ற வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

நோர்வேயின் புதிய தூதுவர் ஜோன் ஹன்சன் பௌயர் சூடான், பலஸ்தீனம் ஆகிய நாடுகளை இரண்டாக பிரிப்பதில் முன்னின்று செயற்பட்டார். இவரே இலங்கையின் சமாதான தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார். நாடு துண்டாடப்படுவதற்கு எதிராக தேசப்பற்று தேசிய இயக்கம் நாடெங்கும் ஓயாத போராட்டங்களை நடத்தவுள்ளது என்றும் தெரிவித்தார்.

## க.பொ.த....

ருப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

## அதிகார...

இருந்து செயற்பட வேண்டும். நீண்ட காலமாக இலங்கையில் நடைபெற்று வரும் இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பரவலாக்கல் மூலமே தீர்வு காணப்படுவது அவசியமாகும். இந்தியாவின் அதிகார பரவலாக்கத்திற்கு ஈடாகவே இறுதித் தீர்வு எட்டப்படவேண்டும்.

அனைத்து சமூகங்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் தீர்வுக்கு இந்தியா தனது பூரண ஆதரவை வழங்கும் எனத் தெரிவித்தார்.

## சொல்ஹெய்ம்....

இதுகுறித்து கருத்து வெளியிட்ட எரிக் சொல்ஹெய்ம் - எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சூடான் சமாதான முயற்சிகளில் பௌயர் தொடர்புபடவேயில்லை.

சூடான் சமாதான முயற்சிகளில் நோர்வே அரசாங்கத்தின் உதவியுடனான அரசுகளுக்கிடையிலான அபிவிருத்தி அதிகாரசபையே ஈடுபட்டது. நோர்வே அரச குழுவில் பௌயர் உறுப்பினராகவே இருக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

## ஜனாதிபதி......

அன்ரன் பாலசிங்கத்தை நோர்வே சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக்சொல்ஹெய்ம் லண்டனில் கடந்தவாரம் சந்தித்தபோது இந்தக் கோரிக்கை முன்வைத்ததாக கூறப்படுகின்றது.

கட்டுநாயக்கா விமான நிலையம் ஊடாக ஜெனிவா பயணம் மேற்கொள்ளும் புலிகளின் குழுவினருக்கான பாதுகாப்பு உத்தரவாதத்தை அரசாங்கமும் நோர்வேயும் வழங்காத நிலையில் இந்த ஏற்பாட்டைச் செய்யுமாறு பாலசிங்கம் கோரிக்கை விடுத்தார்.

அதேவேளை மகிந்தவின் பதிலை பெற்றுக்கொண்டுநாளை மறுதினம் மீண்டும் பாலசிங்கத்தை எரிக்சொல்ஹெய்ம் சந்திக்கவுள்ளார் என்று கொழும்பு செய்தி ஒன்று தெரிவித்தது.

# நல்லெண்ணத்தை வெளிப்படுத்த...

புதிதாக பணியேற்றுள்ள நோர்வேயின் விசேட தூதுவரையும், இலங்கைக்கான நோர்வேயின் தூதுவரையும் சந்தித்து தற்போதைய நிலவரம் தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளோம்.

ஜெனிவா பேச்சு தொடர்பாகவும், ஜெனிவா பேச்சின்போது இணக்கம் காணப்பட்ட விடயங்கள் பற்றியும், ஜெனிவா பேச்சின் பின்னரான களநிலை மாற்றங்கள் தொடர்பாகவும் இந்தச் சந்திப்பில் விளக்கியுள்ளோம்.

ஜெனிவா உடன்பாட்டை அரசாங்கம் மதித்து நடப்பதை உறுதிசெய்வது அடுத்த கட்ட முயற்சிகளுக்கு மிக முக்கியமானது என்பதையும் இந்தச் சந்திப்பில் சுட்டிக்காட்டியுள்ளோம்.

கேள்வி: அடுத்தகட்ட பேச்சு நடைபெறுவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளனவா?

பதில்: அடுத்தகட்ட பேச்சுக்கு முன்னர் முதல்கட்ட பேச்சிலே இணக்கம் காணப்பட்ட விடயங்களுக்கான அமுலாக்கத்தையும், அதன்மீதான நம்பிக்கையையும் வெளிப்படுத்தியுள்ளோம்.

ஜெனிவாவில் இணக்கப்பாடு காணப்பட்ட பின்னர் தமிழர் தாயகப் பிரதேசத்தில் முன்பு இருந்ததை விட ஆயுதக்குழுக்களின் செயற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. ஆயுதக் குழுக்கள் வெளிப்படையாகவே இராணுவத்தோடு சேர்ந்து பொதுமக்களை அச்சுறுத்துவதும், மக்கள் மீதான வன்முறையை கட்ட விழ்த்து விட்டிருப்பதும், போராளிகள்மீது தாக்குதல்களை அதிகரித்திருக்கும் சூழலையும் இன்றைய சந்திப்பில் எடுத்துவிளக்கியிருக்கிறோம். அதற்கான ஆவணங்களையும் கையளித்துள்ளோம்.

கேள்வி: பேச்சுக்கு இன்னும் இரு வாரங்களே உள்ளன. இணக்கப்பாட்டினை அரசு நடைமுறைப்படுத்தும் என நினைக்கிறீர்களா?

பதில்: தனது நல்லெணத்தைக் காட்டுவதற்கு அரசாங்கத்துக்கு இன்னும் சிறிது காலம்தான் இருக்கிறது. அதற்குள் அரசாங்கம் தனது நல்லெண்ணத்தைக் காட்டவேண்டும் என்பதை இன்றைய சந்திப்பில் வலியுறுத்தியுள்ளோம்.

கேள்வி: தெற்கில் உள்ளூராட்சி சபைத் தேர்தலால் ஏற்பட்ட சூழல் நிலை நடைமுறைக்கு சாத்தியமானது எனக் கருதுகிறீர்களா?

பதில்: மிக வெளிப்படையாகவும், கடுமையாகவும் இனவாதம் பேசிய கட்சிகள் சிங்கள மக்களாலேயே தூக்கியெறியப்பட்டுள்ளன. இந்த நிலையில் மகிந்த ராஜபக்ஷ காரணங்கள் சொல்வதற்கு இனி ஒன்றும் இல்லை. தமிழர் பிரச்சினையில் தீர்க்கமான முடிவுகளை எடுத்து சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு முழுமையாகச் செயற்பட வேண்டிய பொறுப்பு அவருக்கு உண்டு.

அதற்கான ஆணையே சிங்கள மக்கள் தேர்தலில் வழங்கியுள்ளனர் என நினைக்கிறேன்.

மகிந்த ராஜபக்ஷ இரட்டை வேடங்கள் போடாமல் தீர்க்கமான முடிவுகளை எடுத்து சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு முயலவேண்டும். குறிப்பாக போர்நிறுத்த ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்துவதில் நேர்மையாக நடப்பதை அவர் உறுதிசெய்ய வேண்டும். ஜெனிவா உடன்பாட்டை விரைந்து அமுல்படுத்துவதன் மூலம் களநிலைமைகளைச் சீராக்கினால் அமைதி முயற்சிகள் முன்னோக்கிச் செல்லலாம் என நான் நினைக்கிறேன்.

கேள்வி: ஜெனிவா இணக்கப்பாட்டை அரசு நடைமுறைப்படுத்தாத நிலையில் அடுத்தகட்ட பேச்சுக்கு தாங்கள் செல்வது இறுக்கமான தங்களின் நிலைப்பாட்டில் ஒரு தளர்வை ஏற்படுத்துவதாகக் கருதலாமா?

பதில்: அடுத்தகட்ட ஜெனிவா பேச்சுக்கு நாட்கள் இருக்கின்றன. எமது தலைமைப்பீடத்தின் நிலைப்பாட்டையும், கரிசனையையும் நோர்வே தரப்புக்கு இன்று விளக்கியுள்ளோம். இனி வரும் நாட்களுக்குள் அவற்றுக்கான தீர்மானங்களும், முன்னெடுப்புக்களும்தான் அடுத்தகட்டப் பேச்சுக்கான தீர்மானங்களை எடுப்பதற்கான காலமாக இருக்கும் என நான் கருதுகிறேன்.

கேள்வி: ஜெனிவா இணக்கப்பாட்டை அரசு நடைமுறைப்படுத்தவில்லை. இந்த நிலையில் நீங்கள் இரண்டாவது பேச்சுக்குச் செல்வதால் என்ன பயன்?

பதில்: எமது தலைமைப்பீடம் அடுத்தகட்ட முயற்சிகள் தொடர்பாக பரிசீலனைக்கு உட்படுத்தவேண்டிய சூழலுக்குள் தள்ளப்பட்டுள்ளது. தற்போது களநிலைமைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறிப்பாக ஆயுதக் குழுக்களின் வெளிப்படையான நடமாட்டங்களும், அடாவடித்தனங்களும் தீவிரமடைந் துள்ளன.

அண்மையில் மட்டக்களப்பில் கருணாகுழு, ஈ.பி.டி.பி.குழு பகிரங்கமாகவே மக்கள் மத்தியில் வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளார்கள். இவை பற்றியெல்லாம் இந்தச் சந்திப்பில் விளக்கியுள்ளோம். மகிந்த ராஜபக்ஷவை சிறப்புத் தூதுவர் சந்திப்பதாகவும், இந்த விடயங்கள் தொடர்பாக எடுத்துரைப்பதாகவும் வாக்குறுதியளித்துள்ளார். நாம் பொறுமை காக்கவேண்டியுள்ளது.

கேள்வி: ஜெனிவா பேச்சுக்குப் பின்னர் வடக்கு - கிழக்கு மாகாணங்களைப் பிரிப்பதற்காக கொழும்பில் ஏழு கட்சிகள் கூடியுள்ளன. இதற்கு தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தலைமை தாங்கியுள்ளது. விமல் வீரவன்ச பிரதானமாக உரையாற்றியுள்ளார். கருணாகுழுவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஜெனிவா பேச்சுக்குப் பின்னர் அரசாங்கமே ஆயுதக் குழுவை அங்கீகரித்துள்ளதே இவை பற்றி?

பதில்: அரசாங்கம் அங்கீகரித்திருக்கிறதோ இல்லையோ என்பதற்கு அப்பால் சிங்கள மக்களும், தமிழ்மக்களும் ஒரு தெளிவான முடிவை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். தற்போது நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலில் பச்சை இனவாதத்தை பேசிய கட்சிகளை சிங்கள மக்கள் தூக்கியெறிந்திருக்கிறார்கள்.

அதேபோன்று தமிழ்மக்கள் தங்களுடைய இலட்சியம், உறுதிப்பாடு தொடர்பாக தமது நிலைப்பாட்டை தெளிவாக வெளிப்படுத்தியுள்ளனர். ஆயுதக்குழுக்களின் செயற்பாடுகளுக்கு சாட்டையடி கொடுத்திருக்கிறார்கள். தெற்கிலே உள்ள சிங்கள் மக்கள் கூட சமாதான முயற்சிகளுக்கு எதிரான சக்திகளை தூக்கியெறிந்திருக்கிறார்கள்.

இந்தநிலையில், மகிந்த ராஜபக்ஷ தனது நிலைப்பாட்டை தெளிவாக்கிக்கொள்ளவேண்டிய ஒரு நிர்ப்பந்தத்துக்குள் தள்ளப்பட்டுள்ளார் என்றே நான் நினைக்கிறேன். மகிந்த ராஜபக்ஷ ஒரு தெளிவான முடிவை எடுத்துக்கொண்டு தமிழ்மக்களின் பிரச்சினைகளை நன்குணர்ந்து தனது செயற்பாட்டில் மாற்றங்களைக் காட்டுவது அவசியமானதாகும்.

கேள்வி: மகிந்த சிந்தனை மாற்றியமைக்கப்பட வேண்டும் எனக் கருதுகிறீர்களா?

பதில்: நிச்சயமாக.

கேள்வி: ஜெனிவா செல்லும் தங்களின் பாதுகாப்புத் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதா?

கேள்வி: பல விடயங்களை இன்றைய சந்திப்பில் எடுத்துக்கூறியுள்ளோம். எமது பயணங்கள் தொடர்பாகவும், அடுத்தகட்ட பேச்சுக்களை முன்னெடுப்பதாயின் தற்போதைய களநிலைமைகளில் ஏற்படவேண்டிய மாற்றங்கள் தொடர்பாகவும் எமது தலைமைப்பீடத்தின் நிலைப்பாடுகள், கரிசனைகள் தொடர்பாகவும் விரிவாக நோர்வேதரப்புக்கு எடுத்து விளக்கியுள்ளோம்.

அவர்களும் நடவடிக்கை எடுப்பதாகக் கூறியிருக்கின்றனர். அடுத்த கட்டச் செயற்பாடுகளை வைத்துக் கொண்டுதான் அடுத்த முடிவுகளை தலைமைப்பீடம் எடுக்கும்.

அரசாங்கத்துக்கு பல செய்திகளை அனுப்பியுள்ளோம். ஜெனிவாவில் இணக்கப்பாடு காணப்பட்ட போர்நிறுத்த அமுலாக்கத்தைச் செயற்படுத்துவது, தற்போது ஏற்பட்டிருக்கும் குழப்பமான சூழ்நிலைகள் தொடர்பாகவும், இவற்றை சீர்செய்வது தொடர்பாகவும், எமது மக்களின் நம்பிக்கையை கட்டியெழுப்புவதன் அவசியம் தொடர்பாகவும் நோர்வே தரப்புக்கு தெளிவுபடுத்தியுள்ளோம். இவற்றை அரசாங்கத்துக்கு நோர்வே தரப்பு தெளிவுபடுத்துவார்கள் என சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

அதேவேளை - ஊடகவியலாளர்களிடம் நோர்வே அரசின் சிறப்புத் தூதுவர் ஜோன் ஹன்சன் பௌயர் கூறியதாவது -

கிளிநொச்சிக்கு முதல்முறையாக வருவதில் மகிழ்சியடைகிறேன். விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்துப் பேசினோம். தற்போதைய நிலைமைகள் தொடர்பாக இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டது.

ஜெனிவா பேச்சுக்களுக்கான மையவிடயம் தொடர்பாகவோ, அல்லது பேச்சுக்கள் எப்படி நடைபெறும் என்றோ நாம் சொல்லமுடியாது. இரு தரப்பினரும் அமைதி ஏற்படும் என்று உணர்ந்திருக்கிறார்கள்.

துணை ஆயுதக்குழுக்களின் ஆயுதக்களைவு தொடர்பாக அரசாங்கத்திடம்தான் கேட்கப்படவேண்டும் என்றார்.

AIMS

ACADEMY OF INFORMATION MANAGEMENT & SYSTEM STUDIES

Vacation @ AIMS

விடுமுறையை பயனுள்ளதாக்குங்கள்

AIMS உடன் இணைந்து

மேலதிக விபரங்களுக்கு 08-04-06ற்கு முன்னர் அலுவலகத்தை அணுகவும்

#118, பலாலி வீதி, தபாற்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி

Center for FOSS & LAMP

# மரண அறிவித்தல்

## அமரர் முத்துக்குமாரு தேவராசா

தொட்டிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு தேவராசா காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமாரு - பார்வதிப்பிள்ளையின் அன்பு மகனும், தவபூசணியின் அன்புக் கணவரும், நடராசா, ஞானேஸ்வரியின் அன்புச் சகோதரரும், கேதினி, தவரூபன், பவரூபன், தர்சினி (யா.சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் 6.4.2006 மாலை 4 மணிக்கு இடம்பெற்று விளாவெளி இந்து மயானத்துக்கு பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்

மனைவி, பிள்ளைகள்

(இ-47)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 06.04.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.